முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 | 21—12—56 | வெள்ளி | ஒலி 38

நிதி அமைச்சரே; — — நிதி அமைச்சரே!

சென்னை மாநில அரசினர் 1957–58–க்கான வரவு செலவுத் திட்டத்தினை சட்டசபையிலே பிரரேபித்தனர்.

ஆனால் இந்த ஆண்டு வரவு செலவுத்திட்டம் ஏனைய ஆண்டுத் திட்டங்களைவிடப் புதுமை நிறைந்ததாயிருக்கிறது.

எப்போதும் வரவு செலவுத் திட்டத்தை அறிவிக்கும்போது வரவுக்குமேல் செலவு நேர்ந்து 'பட்ஜெட்'டிலே துண்டு விழுமானால்; துண்டு விழும் அந்தத் தொகையை ஈடு செய்ய எந்தெந்த வரிகளைப் போட்டு வருமானத்தை உயர்த்தலாம்— என்பதையும் வரவு–செலவைப் பிரகடனப் படுத்தும் நிதி அமைச்சரே அறிவித்து விடுவார்.

ஆனால் இந்த ஆண்டு நிதியமைச்சர் அப்படிச் செய்யவில்லை.

துண்டு விழுந்த தொகையை ஈடு செய்யும் மிகப் பெரிய பொறுப்பினைத் தட்டிக் கழித்து; அந்தக் கைங்கரியத்தினை தேர்தலில் வெற்றிபெற்று வரும் மந்திரி சபை கவனித்துக் கொள்ளும்—என்று அவர் அறிவித்திருக்கிறார்.

அதன்படி அடுத்த ஆண்டின் வரவு ரூ 52 கோடி 65 லட்சங்கள். ஆனால் அடுத்த ஆண்டு செலவாகப் போகும் தொகையோ ரூ 57 கோடி 71 லட்சங்கள்! இதனால் துண்டு விழும் தொகை 5 கோடியும் 6 லட்சங்களும்!

அதிகமாக செலவு செய்யப் பட இருக்கிற இந்த 5 கோடியே ஆறுலட்சம் ரூபாய்களையும் வசூல் செய்ய வருங்கால அரசாங்கம்தான் வரிவிதிக்கவேண்டும்!

—ஏனெனில் துண்டு விழும் தொகையினைச் சரி செய்ய இப்போது புதுவரிகளை விதிப்பது வருங்கால மந்திரி சபையின் கொள்கையைப் பாதிப்பதாக இருக்கும் என்று அறிவித்திருக்கிறார், நிதி அமைச்சர்!

ஐந்து கோடியே ஆறுலட்சம் ரூபாய்களை எப்படியாவது வசூலித்தே தீரவேண்டுமென்று வருங்கால அமைச்சரவையை கட்டாயப் படுத்துவது அதன் கொள்கையைப் பாதிக்காதாம்!

ஆனால் இந்தத்தொகையினைச் சரிசெய்ய புதிய வரிகளை அறிவிப்பதும்மட்டும் அதன் கொள்கையைப் பாதித்து விடுமாம்!



டாக்டர் அம்பேத்கார் அவர்களின் சடலம் பொது மக்களின் பார்வைக்கென 'இராசகிருக'த்தில் வைக்கப்பட்டிருக்கிறது. தாய்மார்களும் தோழர்களும் பல்லாயிரக்கணக்கில் கூடியிருக்கின்றனர்.

—பாவம்; தேர்தல் வருவது கண்டு திகில் கொண்ட நிதி அமைச்சர் பொது மக்களைச் சிறு குழந்தைகளென்று நினைத்துக்கொண்டு பேசியிருக்கிறார், இப்படி!

விழுந்திருக்கும் துண்டினை ஈடுகட்ட அமைச்சர் எப்படியாவது வரிவிதித்துத்தான் ஆக வேண்டும்!

பொது மக்கள் நலத்திலே உண்மையான அக்கரை கொண்ட இயக்கத்தவர்கள் வரிவிதித்தால் அந்த வரிகள் எந்த வகையிலும் ஏழையைப் பாதிக்காத விதத்திலும்; ஆனால் அதே நேரம் பண முதலைகளின் திருட்டு லாப மூட்டைகளைக் குறைத்திடும் அளவிற்கும் தனது வரி விதிப்பு கொள்கைகளை அமைத்துக் கொள்வர்!

ஆனால் முதலாளிகளுக்குப் பின்பாட்டுப் பாடி; பண மூட்டைகளுக்குப் பக்க வாத்தியம் வாசிக்கும் இந்தக் கேடு கெட்ட சென்னை அரசு வரி விதித்தால் அது யாரை நேர் முகமாகப் பாதிக்கும்?

நிச்சயமாக அந்த வரி என்னும் பொருளாதாரக்கணை மாளிகைகளையெல்லாம் விட்டுவிட்டு; குடிசையைத்தான் தாக்கும்! ஏழைகளின் கண்ணீரைத்தான் அது அதிகமாகப் பெருக்கும்!

அதனால் இந்த முதலாளிகளின் கைப் பாவைகள் தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கும் இந்த நேரத்திலே புதிய வரிகளை அறிவிக்காமல் பொறுப்பைத்தட்டிக்கழித்துவிட்டனர்

தேர்தல் முடிந்து விடும்; மீண்டும் காங்கிரசே பதவிக்கு வரும். வந்த மறுகணமே துண்டு விழுந்த 'பட்ஜெட்'டை ஈடு செய்ய ஏழை எளியவர்களின் மீது வரி விதித்துவிடலாம்; பிறகு ஐந்து ஆண்டுகளுக்குத் தங்களை அசைக்க முடியாது.

—இதுதான் இவர்களது அந்தரங்கம்; அதனால்தான் தேர்தல் முடிவுவரை இவர்கள் புதிய வரிகளை அறிவிக்கவில்லை!

நேர்மையில் நாட்டம் கொண்ட தோழர்களே; நெஞ்சில் கை வைத்துச் சொல்லுங்கள்—இந்தக் கெட்டெண்ணக்காரர்களை பதவியிலேற்றுவதற்கா நீங்கள் மீண்டும் சந்தர்ப்பம் தரப்போகிறீர்கள்!

தேர்தலுக்கு சினிமாவாம்! திருந்திஞர்கள் தேசிய வீரர்கள்!

குள்ள நரியின் ரத்தம் தோய்ந்த பற்களுக்கு இரத்தத்தை விடச் சிவப்பான சாறு கொண்ட திராட்சையின் கனி கிடைக்காத நேரத்தில் சீ; சீ; இந்தப் பழம் புளிக்கும்—என்று கூறி விட்டு; வழிகின்ற உமிழ் நீரைத் தேக்கி விட்டு வழி நடக்குமாம்!—பாட்டிகள் கதை சொல்ல இதை நாம் பால வயதிலேயே கேட்டிருக்கிறோம்.

இதுபோன்ற குள்ள நரிகள் காட்டில் மட்டுமல்ல; நாட்டிலும் ஏராளம் உண்டு!

பொருள் தனக்கு கிடைக்காதபோது அதிலே குறையிருக்கிறது; குற்றங்கள் மலிந்திருக்கின்றன என்று போலிப் பிரச்சாரம் செய்வர், கூலிப் படையை அமைத்து துவேஷத்திற்கு மடைகோலுவர்!

இத்தகைய நச்சு மனத்தினருக்குக் கையிலே செங்கோலும் கிடைத்து விட்டாலோ ஆலை வாய்ப்பட்ட கரும்புதான் ஆகாதவர்கள் நிலை!

சினிமா — இருபதாம் நூற்றாண்டு மனித ஜாதிக்குத் தந்த அருமையான கலைப் படைப்பு!

விஞ்ஞானத்தால் பயிர் செய்யப்பட்ட அற்புதமான விளைவு!

★★★ அது ஒரு அரிய பொழுதுபோக்கு சாதனம்—அதனால் காலை முதல் மாலை வரை ஆலையிலே அவதிப்படும் எண்ணற்ற பாட்டாளிகளுக்குப் பொழுதுபோக்கு சுகம் கிடைக்கிறது—குறைந்த செலவில்!

அது ஒரு தொழில்—அதனால் பல்லாயிரக்கணக்கானவர்கள்—இந்த உபகண்டத்திலே மட்டும் நேரடியாகவும், மறைமுகமாகவும் பதினொரு மில்லியன் பேர்கள் வேலை பெறுகின்றனர்!

★★★ அது ஒரு வியாபாரம்—ஏனெனில் கோடிக் கணக்கான ரூபாய்கள் அதில் மூதலீடு செய்யப்படுகின்றன!

★★★ அது ஒரு 'பொன் வாத்து'—ஏனெனில் அதனால் லட்சக்கணக்கான ரூபாய்கள் வரி என்கிற பெயரிலே அரசாங்கத்தின் கஜானாவிற்குப் போய்ச் சேருகிறது!

★★★ அது கலையின் ஒரு காவலன்—ஏனெனில் இலக்கியம், நடனம், இசை போன்ற துறைகளை வளர்ப்பதற்கு இதைவிட்டால் வேறு வழியே கிடையாது!

—இவ்வளவு பேறு பெற்றது சினிமா; அல்ல—அல்ல; படக்கலை!

அதைத்தான் வெட்டி முறித்துச் சாகடித்துக் குழி பறித்து மூடிவிட வேண்டுமென்றார்கள் ஆளவந்தார்கள்!

பொழுதுபோக்கு சாதனமாக; நல்ல தொழிலாக; நிறைய முதலீடு செய்யப்படும் வியாபாரமாக; வற்றாத அளவுக்கு வரி கொடுக்கும் ஊற்றாக; கலையைப் பேணி வளர்க்கும் காவலனாக—எப்படிப் பார்த்தாலும் கோணலின்றி இருக்கும் படக் கலையைத்தான் பஸ்பமாக்கி விடத் திட்டம் தீட்டியிருந்தார்கள்!

★★ லட்சோபலட்சம் மக்களுக்குப் பொழுது போக்கு சாதனமாக விளங்கி வரும் நாடகத்தை, நாட்டியத்தை, இசை அரங்கை ஒழிப்பதற்கு முன் வருவதில்லை, இவர்கள்!

★★ பல்லாயிரக் கணக்கான தோழர்களுக்கு வேலை தேடிக் கொடுத்திருக்கும் எந்த ஒரு தொழிலையும் மூடிவிட வேண்டுமென்று கூறுவதற்கான தைரியம் இல்லை, இவர்களிடம்!

★ அவ்வளவு கோடி ரூபாய்களையா? அந்தத் துறையிலா? வேண்டாம்; முதலீடு செய்ய முன் வராதே!—என்று மனம் துணிந்து கூறுவதில்லை வேறு வியாபாரங்களைப் பார்த்து இவர்கள்!

★★ கஜானாவிற்கு மூட்டை மூட்டையாக இவ்வளவு வரிப் பணம் தேடித்தரும் எந்த ஒரு தொழிலுக்கும் இவர்கள் அணை போட்டது கிடையாது!

★★ பரதம்; பாட்டு—போன்ற எந்த ஒரு கலைக்கும் இவர்கள் தடை செய்தது இல்லை!

—இருந்தும் சினிமா என்றதும் இவர்கள் சித்தத்திலே புதுவித சக்தி தோன்றி அதை உருத்தெரியாமல் ஆக்கிவிட ஓடிவருகின்றனர்; ஊரிலே யிருக்கின்ற எல்லா உதவாக்கரைகளையும் சேர்த்துக் கொண்டு!

வாலிபர்கள் கெடுகின்றனர்; அவர்களுடைய வளர் மதி குறைபடுகிறது; அவர்கள் மனதிலே மாசு மலையாக வளர்கிறது.

—எதிர்ப்புக் கணை தொடுக்கிறார்கள் சினிமாவைப்பற்றி!

அதுமட்டுமா? ஊரிலுள்ள தாய்மார்களையெல்லாம் தூண்டிவிட்டு 'எங்கள் சிறார்கள் சினிமாவினால் கெட்டுப் போகின்றனர்!' — என்று அவர்களிடம் கையெழுத்து வாங்கியும் அனுப்புகின்றனர்!

யாரோ சில அநாமதேயங்களல்ல; குறுக்கு வழி காட்டுவதன் மூலம் பெரிய மனிதத் தன்மையை அடைந்துவிடப் பார்க்கும் 'பிரகஸ்பதி'களுமல்ல அவர்கள்!

நாடாளும் அமைச்சர்கள்; மாஜி கவர்னர் ஜெனரல்கள்—இந்தக் கூக்குரலுக்குக் காரணமாயிருக்கிறார்கள்!

அடையாறு கலாட் சேத்திரத்திலே ருக்மணி அருண்டேலின் நெளிவும் நுட்பமும் கொண்ட அசைவுகளைப் புரிந்து கொண்டு அரையறியாமலே 'அப்ளாஸ்' கொடுத்து விட்டு; ஊரறிய உலகறிய 'ஔவையார்' படத்தைப் பார்த்து விட்டு; வெளியே வந்த மறுகணமே ஆச்சாரியார் 'படக் கலை ஒழிக!' என்று பிரம்மையை உயர்த்திப் பேசுகிறார்!

ஐந்தாண்டுத் திட்டத்தை அமுலாக்க; வெற்றிப் படுத்த இன்னும் ஏராளமான தொகை வேண்டுமே; இதற்கு என்னென்ன புது வரிகளைப் போடலாம்?—என்று அல்லும் பகலும் யோசனை செய்து கொண்டிருக்க வேண்டிய பதவியாம் நிதி மந்திரி நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருப்பவர் சுப்பிரமணியம்!

வரி விதிப்பதின் மூலமும்; பொருள் திரட்டுவதன் மூலமுமே அரசாங்கத்தை நடத்தி வரும் அந்த நிதி அமைச்சர் தான் புலம்புகிறார், வரி கொடுப்பதில் வேறெந்தத் தொழிலுக்கும் குறைந்து விடாத சினிமாத் தொழில் ஒழிய வேண்டுமென்று!

சினிமாவால் குழந்தை உள்ளங்களிலே கீறல் விழுகிறதா? சிறுவர்கள் மதி சின்னாபின்னமாகிறதா? அவர்கள் பழுவுள்ளங்களிலே மாசு படிகிறதா? நாட்டு மக்களது ஒழுக்கத்திலே விஷம் வீசப்படுகிறதா? அவர்களது ஊக்கம் குறைவு படுகிறதா? சரி; விவாதத்திற்காகவே இதை உண்மையென்று ஒப்புக் கொண்டாலும் அதற்கு அமைச்சர்களாகிய இவர்கள் செய்ய வேண்டிய கடமை யென்ன? ஆற்ற வேண்டிய சொற்பொழிவின் குறிக்கோள் எப்படியிருக்க வேண்டும்?

சினிமாவால் சிறுவர்கள் பாழாகின்றனர்; ஆகவே படாதிபதிகளே! இனிமேல் அப்படிப் படமெடுக்காதீர்கள்! பிஞ்சு மனம் பக்குவம் பெறும்படி படத்தை உருவாக்குங்கள்!

—இப்படிப்புத்தி கூறியிருக்க வேண்டும் படக் கலைமீது பாணம் பூட்டுகின்ற ஆளவந்தார்கள்!

சினிமாவால் நாட்டவரின் ஒழுக்கத்திற்குக் குந்தகம் ஏற்படுகிறது; ஆகவே படாதிபதிகளே! இனிமேல் அப்படிச் செய்யாதீர்கள்; பாரத மக்களின் பண்பாடு திருந்துவதற்காகப் படமெடுங்கள்!

—இப்படி உபதேசம் செய்திருக்கலாம்—அறிவுரை தந்திருக்கலாம் செங்கோல் பிடித்

✽ 10-ம் பக்கம் பார்க்க

தயாராகிவிட்டன!

கவின்மிகு கருத்துப் பெட்டகங்கள்!

மு. கருணாநிதி எழுதிய

வெள்ளிக்கிழமை

விலை ரூ. 2-0-0

உணர்ச்சிக் காவியம்! ஒப்பற்ற நவீனம்!

★

மாறன், எம். ஏ. எழுதிய

'வால் நட்சத்திரம்'

விலை ரூ. 1-0-0

சிந்தனைக் கருவூலங்கள்! சிறப்புமிகு முத்துக்கள்!

★

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் : : திருச்சி

சென்னை 21-12-56 வெள்ளி

அகிம்சா வழியில் 'ஹங்கேரி'?

சித்த வைத்தியம்!—தமிழகம் தன் அனுபவத்தின் துணை கொண்டு கண்டெடுத்த அருமையான வைத்திய முறை!

—ஆனால் இந்த திரவியத்தைத்தான் வட நாட்டு அரசு இப்போது சூறையிடுவதற்கு முன் வந்திருக்கிறது.

வெள்ளையர் என்கிற கொள்ளையர் ஆட்சியில்கூட இவ்வளவு கொடுங்கோன்மை நிகழ்ந்தது கிடையாது. ஆனால் இந்த வடநாட்டு வட்டி வேந்தர்களது கைப் பாவைகளின் துரைத்தனத்திலோ வழிவழி வந்த நம வரலாற்று உரிமைகள் உருத்தெரியாமல் அழித்தொழிக்கப் படுகின்றன.

சோவியத்தின் 'ஏகாதிபத்தியம்' இன்று ஹங்கேரியிலே எங்கெங்கு எழுச்சிக் கனல் இருக்கிறதோ; எங்கெங்கு உரிமை வேட்கை எரிதழலென ஒளி விடுகிறதோ; அங்கெல்லாம் ஆதிக்க நீர் வார்த்து ஒடுக்கி விடுவதை நாம் காண்கிறோம்.

பண்டிதரின் பிரதிநிதி வெளியிட்ட அறிக்கையின்படி ஆயிரக் கணக்கான ஹங்கேரி மக்கள் அங்கே ஆலை வாய்க் கரும்பு போல் அலைக்கழிக்கப்பட்டு இறந்தொழிந்திருக்கின்றனர்.

சோலைக் கிளியென சுதந்தர கீதம் இசைத்தவர்களின் வாய் அங்கே சுக்கல் சுக்கலாய் வெட்டி வீழ்த்தப்பட்டிருக்கிறது.

நிமிர்ந்து நடந்தவர்களின் முதுகெலும்பு உடைத்துப் பொடி செய்யப்பட்டிருக்கிறது.

சோவியத்தின் ஆதிக்கம் நீங்க வேண்டுமென்று கூறியவர்கள் அனைவரும் மறுகணமே பிறந்த மண்ணோடு ஐக்கியமாகித் தீரவேண்டிய பரிதாபமான நிலைமைதான் உருவாகியிருக்கிறது, அங்கே!

இதுபோன்ற சூழ்நிலைகள் அங்கு மேலும் மேலும் வளர்வதற்கு இடமளிக்கப்பட்டால், இன்னும் சில வாரங்களிலே தன்மான உணர்ச்சி கொண்ட ஒரு ஹங்கேரியனை இந்த நீள் வையம் காண முடியாமல் போய்விடும்!

ஹங்கேரி தனக்கென வகுத்துக் கொண்ட பாதையிலே தனி நடை போட வேண்டுமென்று கருதும் ஹங்கேரியனை இனி நாம் பார்க்கவே முடியாமல் போய்விடும்!

ஏனெனில் உரிமை பேசியவர்கள் எல்லாம் இன்று கல்லறைச் செல்வங்களாய்; சாவின் மடியில் தவழும் குழந்தைகளாய்த்தான் இருக்க முடிவதை நாம் பார்த்து வருகிறோம், அங்கே!

மண்ணில் நெளியும் புழுவை மனிதன் மிதித்து நசுக்குவதைப் போல;

எறும்புக் கூட்டத்தை யானை காலெடுத்து வைத்து கூட்டோடு ஒழிப்பதைப் போல;

தாய் மடியைத் தவிர வேறொன்றுமறியாத செம்மறியாட்டுக் குட்டிகளை ஓநாய் மந்தை உருத்தெரியாமல் ஆக்குவதைப் போல;

பலம் மிகக் கொண்ட சோவியத் நாடு எளிமையும், இனிமையும் கொண்ட ஹங்கேரியை இருந்தவிடம் தெரியாமல் அழித்துக் கொண்டிருக்கிறது!

வார்சா ஒப்பந்தம் போன்ற எவையெவைகளை யெல்லாமோ காட்டி எழுச்சியுகம் காண நினைத்த ஹங்கேரி நாட்டு வாலபச் செல்வத்தை ஒட்டு மொத்தக் கூட்டாகச் சுடுகாட்டுக்கு அனுப்பி வைத்துக்கொண்டிருக்கிறது!

—சோவியத் நாடு ஹங்கேரியிலே இட்டடி நடத்திக் கொண்டிருப்பது ஏகாதிபத்தியத்தின் 'நாடு அடக்கும்' திட்டத்தின் கீழுள்ள ஒரு முறைதானே தவிர வேறல்ல.

ரஷ்யாவிலிருந்து ஹங்கேரியைப் பிரித்துக் காட்டக்கூடிய குண நலன்களையும்; குன்றுபோல் நிமிர்ந்து நடக்கும் மனிதர்களையும் அழித்துவிட்டால் ஹங்கேரியின் உரிமைப் போராட்டம் இனிக் காலமெல்லாம் செத்துக் கிடக்கும்— என்பதுதான் ஆதிக்கம் செலுத்த நினைக்கும் சோவியத்தின் போது நினைப்பு.

எனவேதான் அவர்கள் பலாத்காரத்தை அளவுக்கு மீறிப் பிரயோகிக்கிறார்கள்.

ஆனால் தென்னகத்தை நிரந்தரமாகத் தின்று ஏப்பமிட நினைக்கும் வடநாட்டு ஆதிபத்தியக்காரர்களோ அகிம்சை வழியிலேயே சென்று தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ள முனைந்திருக்கிறார்கள்.

காந்திய வழியிலேயே சென்று; ஆயுதங்களை உபயோகப் படுத்தாமல், ஏகாதிபத்தியக் காரியங்களை நிறைவேற்றத் தீர்மானம் செய்திருக்கிறார்கள் அவர்கள்!

இந்தத் தீர்மானத்தின் ஒரு பகுதிதான் தென்னகத்தை வடநாட்டிலிருந்து தனியாகப் பிரித்துக்காட்டும் குண நலன்களை அழித்தொழிப்பதாகும்!

இந்த முறையில் மொழித் துறையில் இந்தியைத் திணித்து திராவிடமொழிக் குடும்பத்தை அழித்துவிட ஆயத்தம் செய்தார்கள்.

இதுபோன்றே வைத்தியத் துறையிலும் தென்னகத்திற்கே உரிய சித்தவைத்தியத்தினை பூக்காமல் காய்க்காமல்; வேரோடு வெட்டி வீழ்த்திவிடவும் முடிவு செய்திருக்கிறார்கள்!

அதனால்தான் அரசாங்கத்தினால் முன்பு நிறுவப்பட்ட தாவே கமிட்டி வெளியிட்டிருந்த அறிக்கையிலே ஆயுர்வேதவைத்திய முறை பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஜெர்மன் நாட்டு முறையான ஹோமியோபதி பற்றிப் பல பக்கங்கள் எழுதப் பட்டிருந்தன.

யூனானி முறை பற்றியும் அதிலே குறிப்புகள் அடங்கியிருந்தன.

அதுமட்டுமா?

இவைகளைக் கவனிக்க ஹோமியோபதிக்கென ஒன்றும்; மற்றவைகளுக்கு ஒன்றுமான நிர்வாக அமைப்புகளை ஏற்படுத்தவேண்டுமென்றும் அந்தத் தாவே கமிட்டி யோசனை வழங்கியிருந்தது.

ஆனால் அந்தோ! தமிழகத்தின் அனுபவக் களஞ்சியமாம் சித்த வைத்திய முறை இருப்பதாகக்கூட அந்தக் கமிட்டியினர் ஒரு வார்த்தை எழுதிவைக்கவில்லை.

இதே அவல நிலைமைதான் இப்போதும் இருந்து வருவதை நாம் பரிதாபத்துடன் சகித்துக் கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம்.

ஏனெனில்; சென்ற கிழமை பார்லிமெண்டிலே இந்திய மருத்துவக் குழு மசோதா நிறைவேற்றப்பட்ட நேரத்திலே; சித்த வைத்திய முறை இழிவு செய்யப்பட்டதைப் பார்த்துக்கொண்டு நாம் கண்ணிருந்தும் குருடர்களாகத்தான் இருக்க வேண்டியிருக்கிறது.

அந்த மசோதாவிலே ஆயுர்வேதத்திற்கும், யுனானிக்கும், ஹோமியோபதிக்கும் மதிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் சித்த வைத்தியமோ அதே நேரத்தில் மிதித்துத் துவைக்கப் பட்டிருக்கிறது.

சித்தர்கள் கண்டெடுத்த சித்தவைத்தியம் சின்னா பின்னப்படுவதை உள்ளுங்கால் நம் உதிரம் கொதிக்கிறது; உள்ளம் வேகிறது.

என்ன செய்வது? தென்னகத்தில் இப்போது 'ஹங்கேரி' நடந்து கொண்டிருக்கிறது; அகிம்சா வழியிலே!

சித்தவைத்தியப் பெருமக்களே! இந்த நேரத்திலும் நீங்கள் அமைதியாக இராமல்; வடநாட்டு ஆதிக்கபுரி நோக்கிச் சீறிப்பாய்ந்தெழா விட்டால் வைத்திய முறைபோன்றே நமது பாரம்பரியங்கள் ஒவ்வொன்றும் பிணக்காடாகிவிடும் என்பதைத்தான் மீண்டும் உங்களுக்கு நினைவு படுத்துவதைவிட நாங்கள் வேறென்ன சொல்ல இருக்கிறது!

★

அருமை நண்பன்

9-ம் பக்கத் தொடர்ச்சி

"இந்த அறைக்குள் யாரோ இருக்கிறார்கள். நான், அவன் தும்புவதைக் கேட்டேன்?" என்றான்.

"நான்தான் தும்மினேன்!" என்று அவனைச் சமாதானம் செய்தேன். என் புதல்விகள் இருவரும் அவனை அங்கிருந்து இழுத்துக் கொண்டு போய்விட்டார்கள்.

அன்று ஒரு விருந்துக்கு எங்கள் வீட்டில் ஏற்பாடாகி யிருந்தது. அதற்கு ஏற்பாடு செய்யாமல் இந்த விஷயத்தைப் பற்றியே கவலைப் பட்டுக் கொண்டிருந்தோம். விருந்தினர்கள் வந்தவுடன் நாங்கள் அமர்ந்து கொண்டு நடக்க வேண்டிய வேலைகளைக் கவனித்தோம்!

அன்று இரவு நாங்கள் யாரும் தூங்கவில்லை. நான் என் உயிலைக் கூட எழுதிவைத்து விட்டேன். சௌள வெளியில் போய் என்ன செய்கிறானோ? யூதனுடைய புத்தகத்தைத் தடயமாக வைத்துக் கொண்டு எங்கள்மீது என்ன நடவடிக்கை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலா மல்லவா?

சௌள செய்த குழப்பத்தில் சிக்பிரெட் பலஹீன மடைந்திருப்பான் என்று நாங்கள் நினைத்தது தவறாகப் போய் விட்டது. அவன் திரும்பவும் 'விஷம் கொடுங்கள்!" என்றுதான் கேட்டுக்கொண்டிருந்தான். அவன் பிணத்தை என்ன செய்வது என்று என் மகள் எடித் கேட்டபோது அவன் காரணமில்லாமல் கோபித்துக் கொண்டான். இதற்கிடையில் என் மனைவி, மரியத்திற்கும், சௌளவுக்கும் விவாகம் நிச்சயம் செய்துவிட வேண்டும் என்றாள். அடுத்த ஞாயிற்றுக் கிழமை என்று நாளும் குறித்தாகி விட்டது. என் பெண்கள் ஒவ்வொருவராக கோபித்துக் கொள்வதைக் கண்ட சிக்பிரெட் "நான் அவசியம் வெளியேறித்தான் ஆக வேண்டுமா?" என்றான். விசேஷம் நடக்கும்போது அவன் இருக்க முடியுமா? "ஆமாம்!" என்றேன் நான். வழக்கம் போல் என்னைக் கலக்காமல் என் மனைவி சிக்பிரெட்டுக்கு ஒரு புதிய இடம் தயார் செய்து விட்டாள்.

எங்கள் படுக்கை யறைக்குள் ஒரு சிறிய அறை இருக்கிறது. அதற்குள் சிக்பிரெட்டை அடைத்து விட்ட பின் கதவை மூடி வெளியில் ஒரு அலமாரியை வைத்து விட்டால் எவ்வித தொந்தரவும் இருக்காது என்று கூறிய என் மனைவி நடைமுறையில் அதைச் செய்தும் காண்பித்து விட்டாள். அலமாரியை நாங்கள் நகர்த்தாமல் சிக்பிரெட் வெளியில் வர முடியாது. நாங்கள் சிக்பிரெட்டிடம் சண்டை பிடித்துக்கொண்டிருந்தபோது என் மனைவி மட்டும் கவலைப்படாமல் கல்யாணத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்ததற்கு, எனக்கு இப்போதுதான் காரணம் விளங்கியது. சிக்பிரெட் அந்த அறையிலிருந்து எவ்வளவு சப்தம் போட்டாலும் வெளியில் கேட்காது. ஆயிரம்பேர் எங்கள் வீட்டிற்கு வந்தால்தான் என்ன?

நான் ஒரு மாஜிஸ்திரேட்தான், இருந்தாலும் அளவுக்கு மீறிய உபாதையால் என் மனம்கூட கெட்ட எண்ணங்களுக்கு இடங்கொடுத்தது. சௌள எங்கள் வீட்டை விட்டுப் போகும் முன் அவனைக் கொன்றுவிடலாம் என்று யோசித்தேன். எண்ணம் மனதோடு நின்றுவிட்டது. அவன் போனபின் சிக்பிரெட்டின் விஷயம் உறுத்திக் கொண்டே இருந்தது. இவனால் எவ்வளவு தொந்தரவுகள்—பால்ய சிநேகிதன் என்றால் இன்னுமா பொறுமையாக இருப்பது? அவனையும் தொலைத்து தலை முழுகிவிட்டால் என்ன? என் மனைவி குறுக்கே இருக்கிறாள் இவ்வளவு நாட்கள் பாதுகாத்து விட்டு இப்போது வருத்தப்படுவதில் அர்த்தமே இல்லை......இவைகளைப் போல் மனதில் இன்னும் எவ்வளவோ எண்ணங்கள்...!

* * *

அவனை வெளியில் அனுப்புவது சுலபம். எங்களைக் காட்டிக் கொடுக்க மாட்டான். ஆனால் அதிகாரிகள் செய்யும் உபத்திரவங்களை அவன் பொறுத்துக் கொண்டு பேசாமல் இருக்க வேண்டுமே! கொடுமை பொறுக்க மாட்டாமல் அவன் எல்லாவற்றையும் சொல்லி விட்டால்...! அதனால் எது வந்தாலும் வரட்டும் என்று நானும் என் மனைவியும் முடிவு செய்து விட்டோம்! நாங்கள் சிக்பிரெட்டை அடைத்து வைத்திருந்த அறை மிகவும் சிறியது. காற்று வசதி அதிகம் இருக்காது. உள்ளே இருப்பவனுக்கு நாள் ஆக ஆக மரண வேதனைதான். இந்த எண்ணமே எங்களை சித்திரவதை செய்யப் போதுமானதாக இருந்தது. வெளியில் உற்சாகமாக இருந்தாலும் உள்ளுக்குள் கவலைதான்! இரவு பகல் எனக்கு சிக்பிரெட்டைப் பற்றிய சிந்தனையேதான். நான் பயப்பட்டது போலவே அவன் வெகு சீக்கிரம் நோயாளியைப் போல் இளைத்துக் கொண்டுவந்தான். அதைக் காரணமாக வைத்துக் கொண்டு நான் அவனிடம் பேச்சுக் கொடுக்கவில்லை.

ஞாயிற்றுக்கிழமை நடந்த கல்யாண நிச்சயதார்த்தம் அமைதியாகவே நடந்தது. மரியம், சௌளவுக்கு இப்போது எல்லா அறைகளையும் திறந்து காட்டி சந்தோஷப்படுத்தினாள். அவனும் அவளை ஒவ்வொரு அறையிலும் முத்தமிட்டான். மறந்து போய்க் கூட அவன் சிக்பிரெட்டின் பேச்சை எடுக்கவே இல்லை. முன் ஜாக்கிரதையாக இருந்தானோ என்னவோ!

இவைகளெல்லாம் நடந்தபின் ஒரு நாள் சிக்பிரெட் காய்ச்சலில் விழுந்து விட்டான்.

எரிச் கோல்வே என்ற ஒரு முனிசிபல் டாக்டரிடம் சிக்பிரெட்டை காட்டலாம் என்று முடிவு செய்தோம். நாங்களே வைத்தியம் செய்வது ஆபத்தான காரியந்தான். மேலும் ஒரு நபருக்கு இந்த ரகசியம் தெரிந்தால் தான் என்ன? அந்த டாக்டருக்கு எனது மகள் எடித் மீது காதல். இதை ஆதாரமாகக்கொண்டு வானத்தை வில்லாகவே வளைத்து விடலாமே! எடித் சிக்பிரெட்டுக்காக டாக்டரைக் காதலிப்பதைப் போல் நடிக்க ஒப்புக் கொண்டாள்.

டாக்டரை வெகு ஜாக்கிரதையாக வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்தோம். அவர் என் நண்பனைப் பரிசோதனை செய்து விட்டு, ஆஸ்பத்திரிக்கே அவனைக் கொண்டு வரச் சொல்லி விட்ட பின் வேறு என்ன வழியிருக்கிறது? கஷ்டப்பட்டு யாருக்கும் தெரியாமல் டாக்டரின் ஆஸ்பத்திரிக்கே அவனை அனுப்பி வைத்தோம். வைத்தியம் தொடர்ந்து நடந்தது. டாக்டர் கொஞ்சம் கெட்டிக்காரர். பத்து நாட்களில் குணம் தெரிந்தது. பதினோராவது நாள் சிக்பிரெட் சற்று வெளியில் போய் வர அனுமதிக்கப் பட்டான். அனுமதி கிடைத்தவுடன் நேராகவே எங்கள் வீட்டுக்கு வந்து தன் உடைமைகளையும் தான் எழுதி வைத்த கையெழுத்துப் பிரதியையும் தன்னிடம் தரும்படிக் கேட்டான் "எல்லாவற்றையும் எரித்தாகி விட்டது" என்றேன் "அதற்குள்ளாகவா? சரி...நான் வருகிறேன் நீங்கள் செய்த உதவிக்கு மிகவும் நன்றி" என்றான்.

சிக்பிரெட் எங்கள் வீட்டுக்கு வந்து விட்டுப் போன மறு நாள்... எதிர்பார்த்தது நடந்து விட்டது இரு உத்தியோகஸ்தர்கள் அவனை அழைத்துக் கொண்டு போனார்கள். அங்கே என்ன நடந்ததோ ...... அவனை 'ஆம்புலன்ஸில் கொண்டு வந்து இறக்கினார்கள், ஆஸ்பத்திரிக்கும் கண்காணிப்பு இருப்பதாக கோல்வே சொல்லி எங்களை எச்சரித்தார். மறு நாள் நாங்கள் போலீசாரின் வரவை ஒவ்வொரு நிமிடமும் எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தோம். ஆனால்......யாரும் வரவில்லை. மாலையில் வந்த கோல்வே எங்களிடம் விஷயத்தைச் சொன்னார்.

"சிக்பிரெட் மிகவும் தைரியசாலி. எவ்வளவோ உபத்திரவம் செய்தும் உங்களை யெல்லாம் காட்டிக் கொடுக்கவில்லை. அவனைத் திரும்பவும் போலீசார் வரச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நான் ஐந்து நாள் தவணை கேட்டிருக்கிறேன். உடம்பில் உள்ள காயங்கள் ஆறுவதற்காக! இன்னும் ஒரு முறை ஆபரேஷன் செய்ய வேண்டியிருந்தாலும் இருக்கலாம்...இவன் உங்களுக்கு ஏதாவது உறவோ?"

"இல்லை...ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?"

"நீங்கள் இவ்வளவு அக்கறையோடு உதவி செய்வதைப் பார்த்தால் அவன் உங்கள் மருமகனோ என்று நினைக்கிறேன்..."

"இல்லை! என் பள்ளித் தோழன்..."

"நண்பர்களுக்காக இந்தக் காலத்தில் இவ்வளவு யாராவது செய்கிறார்களா?.. வெகு அபூர்வம்.. சரி போகட்டும் இரண்டாவது ஆபரேஷன் செய்வதனால் உங்களுக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லையே?"

"இல்லை" என்றேன்.

டாக்டரின் மனதில் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள எனக்கு வெகு நேரம் பிடித்தது. இரண்டாவது ஆபரேஷனுக்குப் பிறகு சிக்பிரெட் பிழைப்பது துர்லபம்! அப்படியென்றால்......? எதிர்பார்த்தது போலவே சிக்பிரெட் இறந்து விட்டான். போலீசாரைத் திருப்பி அனுப்பும் கைங்கர்யம் கோல்வேயினுடையதாக இருந்தது. கோல்வேயை யாராலும் ஒன்றும் செய்ய முடியாது ஏனெனில் அவர் கட்சியின் நம்பிக்கையான அங்கத்தினர்.

நாங்கள் எவ்வளவோ சொன்னோம். எடித் கேட்கவில்லை. இவ்வளவு உதவிக்குப்பின் டாக்டரைக் காதலிக்க மறுத்து விட்டாள். அதுவும் என் தவறல்ல!

* * *

"சொல்லுங்கள் லௌபர்...... நான் உண்மையில் குற்றவாளியா? ...எந்த விதமான தண்டனைக்காவது அருகதை உள்ளவனா? நான் எப்படி கொலைபாளி ஆக முடியும்?" என்றார் பிளாம்.

இதற்குப் பதில் சொல்லாமல் லௌபர் தன் கைக் கெடிகாரத்தைப் பார்த்தார். உடனே துள்ளி எழுந்து,

"அடடே! மணி நான்காகி விட்டதே...நான் உடனே ஓடினால் தான் பெர்லின்ரயில் கிடைக்கும்... வரட்டுமா? தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று கூறி விட்டுப் பயணத்திற்கு ஆயத்தமானார் லௌபர்.

"நீங்கள் என்னைக் குறைவாக மதிப்பிடுகிறீர்களா?" ஆர்தர் இன்னும் அவரை விடவில்லை.

"நானா?...நல்ல வேளை கடவுள் என்னை நீதிபதியாகப் படைக்கவில்லை" என்று கூறிவிட்டு லௌபர் வெளியேறினார்.

குடும்பம் ஆடாமல் அசையாமல் அந்த அறையிலேயே உட்கார்ந்திருந்தது. முதலில் எழுந்தது ஆர்தர்தான். அவர்தம் பெண்களை நோக்கி,

"இந்த அறைக்கு இன்னொருவனை நாம் தேட வேண்டும். உங்களில் யாரையாவது லௌபர் மணப்பான் என்று நினைத்திருந்தேன்: ஏனெனில் அவன் நல்லவன். என் ஆசைதான் நிறைவேறவில்லை" என்றார்.



8—12—56...துறையூரில் நடைபெற்ற தி. மு. கழக பொதுக் கூட்ட மேடையில் கூட்டத் தலைவர், அழகுமுத்து, எம். எஸ். மணி, மு. க. ஆகியோர்.

காதலுக்குக் கண்ணில்லை

•தொடர் நாடகம்•

தில்லை வில்லாளன் எம். ஏ.,

(காட்சி-21: தொடர்ச்சி)

பொன்மேனியாள்: [பழிதீர்த்தானிடம் அழுங் குரலில்] என் அன்பரை என்னிடம் அனுப்பிவிடு. ஐயோ, நான் எப்படி அவரைக் காதலிக்கிறேன் என்று நீ அறியமாட்டாய்.

ப: அவன் உன்னைக் காதலிக்கவில்லை, அம்மையே!

பொ: பொய்—பொய்—முழுப் பொய்—அப்படிச் சொல்லும் உன் நாக்குதான் அழுகிப் போய்விடும். இந்த நாற்காலியின் பக்கத்தில்தான் அரை மணி நேரத்திற்கு முன் நின்று கொண்டிருந்தார். இந்தக் கரத்தைத்தான் கரும்பெனக் கூறினார். என் உதடுகளை கற்கண்டுத் துண்டுகள் என வர்ணித்தார். இந்தக் காதுகளில்தானே, காதல் கீதமிசைத்தார். அந்தக் காதல் தேவனை என்னிடமிருந்து பிரிக்காதே!

ப: அம்மையே, அவனை இன்றிரவு மட்டுமல்ல, இனி எந்த இரவிலும் சந்திக்க முடியாது.

பொ: சரி—நீ யார்? உன் பெயர் என்ன? அதைக் கூறு.

ப: நான் யாரா—என் பெயரா—பழிக்குப்பழி!

பொ: பழிக்குப் பழி! நான் சிறு குழந்தைக்குக்கூட சிறு தீங்கும் செய்தறியேனே! என் வாசலருகே, அதற்கு வர வேண்டிய வேலை என்ன? சாவுதான் ஏற்கனவே எனக்கு வழிகாட்ட, இடுகாட்டு விளக்குடன் காத்திருக்கிறதே! சாவை, மனிதர்கள் வெறுக்கிறார்கள் என்பது உண்மை ஆனால் சாவு, என்னிடம் மிகவும் இனிமையாகவே நடந்து கொண்டுள்ளது — அதுவும் என் காதலரைவிட, மிக மிக அன்போடு நடந்துவந்துள்ளது. ஆகவே பகலை உடனே போகச் சொல்லிவிட்டு, அதன் தங்கையான இரவை அழைத்துவர தூதுவர்களை உடனே அனுப்ப வேண்டும் —இந்த உலகையே அழுகையில் நனைக்க வேண்டும். இரவின் மந்திரியான ஆந்தை தனது பாழும் மண்டபத்திலிருந்து அலறட்டும் சாவின் தூதுவர்கள் காற்றிலும், மேகத்திலும் விரைந்து வரட்டும். பூமியிலுள்ள செடி கொடிகள் அசைவில் சாக்காட்டு சங்கீதம் முழங்கட்டும். சுடுகாட்டுப் பன்றிகளை விட்டு புதைகுழி தோண்டச் சொல்ல வேண்டும். ஏனெனில் இன்றிரவு இறப்பின் அணைப்பிலே இன்பம் காணப் போகிறேன்.

[அந்தக் கருவுருவம் மறைகிறது.]

காட்சி-22

[அரசாங்கப் பொது நூலகத்தில் குயில் குரலாளைச் சந்திக்கிறான் நகைமுகத்தான்—பேசுகிறான்.]

நகைமுகத்தான்: இளவரசியாரே, தாங்கள் ஏழைக்கிரங்கும் இதயம் படைத்தவர்கள்.

குயில் குரலாள்: என்னை அடிக்கடி புகழ்கிறீர்கள்.

ந. மு: புகழ் பேசி, பொருள் தேடும் இழி மனங் கொண்டவன் அல்ல.

கு. கு: தாங்கள் எனக்கு அவிழ்க்க முடியாத சிக்கலாக இருக்கிறீர்கள்.

ந. மு: சிக்கல், தானே அவிந்தால் நூல் பயன்படும்—கத்தரித்தால் சிக்கல் அவிழும்; நூல் கெட்டுவிடும். ஆகவே சிக்கல் அவிழும்வரை காத்திருங்கள். தாங்கள் அதுவரை என்னைப்பற்றி ஆராயாதீர்கள். இப்போது எனக்கொரு உதவி செய்ய வேண்டும்.

கு. கு: உதவியா?

ந. மு: ஏழைக்குதவுவீர்கள் என்ற நம்பிக்கையிலே கேட்கிறேன்.

கு. கு: என்ன உதவி?

ந. மு: இளவரசியாரே, அரண்மனையில் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் உலவும் ஒற்றர் அத்தாட்சி மோதிரம் எனக்கு வேண்டும்!

கு. கு: உங்கள் பேச்சு, என்னை மிகவும் அச்சுறுத்துகிறது!

ந. மு: இதனால் அபாயமிருக்காது இளவரசியாரே! அனர்த்தங்கள் விளைய இருந்தால்கூட தவிர்க்க உதவியாக இருக்கும்.

கு. கு: (யோசித்து) தங்களிடம் ஏனோ எனக்கு பரிவு பிறந்து விட்டது. கேட்டதை மறுக்க முடியவில்லை—சரி, தருகிறேன்.

காட்சி-23

[வெண்ணிலவு தண்ணொளி பொழியும் இரவு என்றாலும், வெகு தூரத்தில் இடியும், மின்னலும் இருக்கின்றன மன்னன் மாளிகையில், ஒரு படிக்கட்டு—அதை யொட்டி பெருவாயில்! அந்த வாயினுள் மறைந்து மறைந்து நுழைகிறான் ஆளவந்தான். அவன் உடல் முழுவதும் கருப்புத் துணியால் மூடப்பட்டிருக்கிறது. அவன் மனம் பெருஞ் சுமையுடன் கிடக்கிறது.]

ஆளவந்தான்: காற்றோ. கன வேகத்தில் அடிக்கிறது—நூலேணி எவ்வளவு ஆட்டம் ஆடிவிட்டது! காற்றலே ஒவ்வொன்றும் கயிற்றின் ஒவ்வொரு முடிச்சியையும் இற்றவிழச் செய்து விடும்போலிருக்கிறது! இரவு—இடியும், மின்னலும் இணைந்து வரும் இரவு—மின்னலொளியிலே, அறவாழி திடீர் திடீரெனத் தோன்றி மறைகிறது. ஒவ்வொரு வீதியும், வீதியிலே உள்ள நல்ல நல்ல மாளிகைகளும் கணத்திற்கு கணம் தோன்றி மறைகின்றன!

[ஆளவந்தான் — மாடியிலேறாம் இந்து மங்தம் நடக்கிறான். திறந்து கிடந்த சாளரத்தின் வழியாகப் பார்க்கிறான். அங்கே, அவன் கண்ட காட்சி வியப்பிலாழ்த்தி விட்டது! மாடிக்கு ஏறும் படிகளில் ஒன்றில் கருப்பு உருவம் ஒன்று உட்கார்ந்திருந்தது ஆளவந்தானுக்கு அவ்வுருவம் யாரென்று தெரியவில்லை. அந்த உருவத்தின் அருகில் செல்கிறான்]

ஆள: ஏய், நீ யார்? ஏன் இங்கு இந்த இரவில் வந்திருக்கிறாய்? மானின் உயிர் குடிக்க பதுங்கிப் பாயும் புலி போல பதுங்கிக் கிடக்கிறாய்! கூறு...ஏய், நீ ஊமையா? அல்லது அடிக்கும் காற்று, உன் நாக்கின் பேசும் சக்தியைப் பறித்துக்கொண்டோடி விட்டதா? ஏய், நான் சொல்வதைக் கேள். இந்த இடத்தைவிட்டு இப்போதே ஓடிவிடு. இதோ, இந்த மாளிகையில் எனக்கு முக்கியமாக இன்றே முடிக்க வேண்டிய வேலையிருக்கிறது. அந்த வேலையை, வேறு எவருமின்றி நான் தனியே செய்து முடிக்க வேண்டும். எழு—இந்த இடத்தைவிட்டோடு! இல்லாவிட்டால், உன் உயிரிழக்க நேரிடும் — அழிந்து போகாதே—எழுந்துவிடு!

[அந்த கருப்பு உருவம் எழுகிறது. முகத்தை மூடிய துணியை விலக்கிற்று. அவ்வுருவம் வேறு யாருமில்லை. பழிதீர்த்தானே மறைவு உடையில் வந்திருக்கிறான்.]

ப: தம்பி, இன்றிரவுதான் பழி வாங்கப்பட்ட உன் தந்தை சிரிக்கிறார்.

ஆள: (குழப்பத்தோடு) என்ன அண்ணா, தாங்களா இங்கு இருக்கிறீர்கள்?

ப: ஆம், தம்பி. உன் வரவிற்காகக் காத்திருந்தேன்.

ஆள: அண்ணா தங்களை நான் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் வந்ததும் எனக்கு மகிழ்ச்சிதான் தருகிறது. ஏனெனில், நான் செய்யப் போவதைத் தாங்கள் அறிந்துகொள்வது நல்லதானே!

ப: தம்பி முதலில் நம் திட்டத்திற்கான என் ஏற்பாடுகளைக் கவனமாகக் கேட்டுக்கொள் — கோட்டை வெளியிலே இரண்டு குதிரைகள் தயாராக உள்ளன வேலை முடிந்ததும், நாம் இருவரும்

❋ 8-ம் பக்கம் பார்க்க



8—12—56 துறையூரில் தி. மு. கழக பொதுக் கூட்டத்தில் மு. கருணாநிதி பேசும் காட்சி.



காட்சி 14.

சமயோஜிதம் பிள்ளை வீடு

[சமயோஜிதம்பிள்ளை, மகளைக் காணாத குழப்பத்தில் ஆழ்ந்த யோசனையில் இருக்கிறார். பலவேஷமும் கூட இருக்கிறார்.]

சமயோஜி: பொழுது விடிஞ்சும் இவ்வளவு நேரம் ஆகுது—இன்னும் காணோமே அய்யா கண்ணம்மாவை!

பலவே: பதறாதீங்க...பெண்ணு எங்கேயும் போய்டாது!... இது என்ன; காத்தவராயன் மதுரைவீரன் காலமா; பெண்ணு காணாமலே போய்ட!......நம்ப காங்கிரஸ் சர்க்காரு ஆளுது!......இந்த சர்க்காரிலே...நம்ப உடமைக்கும் பொருளுக்கும் உயிருக்கும் தக்க பாதுகாப்பு எப்போதும் உண்டு!...

சம: அட சும்மா இருய்யா இதெல்லாம் நமக்குள்ளேயே பேசிகிட்டு!...... உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பாம்; இப்பதான் மாசத்துக்கு ஒரு ரயில் கவிழுது...நீர் வேற உளறிக்கிட்டு!...

பல: ரயில்மாத்திரமா கவிழுது; ரயிலோட சேர்ந்து மந்திரி பதவிகளும் கவிழுது!...

சம: யாருய்யா; நம்ப லால் பகதூர் சாஸ்திரி ராஜிநாமா பண்ணிட்டாரே; அதைத்தானே சொல்றே?

பல: ஆங்; அவர் ராஜிநாமா செய்தாரு!......எப்படியும் ரெண்டு மாசத்திலே எலக்‌ஷன் வரப்போகுது; அதிலே கவிழ்வதை இப்பவே கவிழ்ந்துடுவோமேன்னு அடிச்சாரு ஒரு ஸ்டண்ட்! அந்த ரெண்டுமாச பதவியைக் கூட விட மனசு இல்லே நம்ப அழகேசருக்கு!...... உடும்புப் பிடியா பிடிச்சுக்கிட்டாரு!...

சம: சாஸ்திரிக்கு மறுபடியும் பதவி கிடைக்கும்னு நம்பிக்கை யிருக்கும்—இவருக்கு பாவம்; இதுதான் கடைசி சான்சுன்னு இருக்கார் போலிருக்கு!

பல: சரி சரி; நமக்குள்ளேயே இதெல்லாம் பேச வேண்டாங்க!...வீட்ல இருக்கிற சுவற்றுக்குக் கூட காது இருக்கும்: அது வேற அந்த தி.மு. பூனைக்கள் காதிலே விழுந்துட்டா; அவ்வளவுதான்!...

சம: நம்ப வீட்ல பேசுற விஷயம் அவனுக காதில எப்படி அய்யா விழும்?

பல: யாரு கண்டா?......நம்ப வீட்டிலேயே யார் யார் தி. மு. க. வோ?......நம்ப டிரைவர் தங்கப்பன் ..."சி" சர்டிபிகேட் நோட்டுக்குள்ளே ஒரு அண்ணாத்துரை படத்தை மறைச்சு வெச்சிருக்கான்!...... சமையக்கார சந்தானமும், தோட்டக்கார பக்கிரியும் ... திருப்பதிக்கு போறதா சொல்லிட்டு லீவு வாங்கிகிட்டு போனானுங்களே; எங்க போயிருக்கானுங்க தெரியுமா; தி.மு.க மகாநாட்டுக்கு!... அட அவ்வளவு ஏனுங்க; நம்ப ஆபீஸ் பையன் இத்தனை யோண்டு பொண்டுப் பயல்..அவன் பாடிக்கிட்டு போறான்..அண்ணா வாழ்கவே...அறிஞர் அண்ணா வாழ்கவேன்னு...!

சம: ஆங்......அப்படியா?...... அப்ப...நீயும் நானுந்தான் இந்த வீட்ல காங்கிரசு!

பல: நீங்ககூட தூக்கத்திலே காங்கிரசை கன்னாபின்னுன்னு திட்டுறிங்க எஜமான்!...சல்லடைபோட்டு சலிச்சு பாத்தா நான் மட்டுந்தான் தற்சமயம் உண்மையான காங்கிரசு!... நாளைக்கு எப்படியோ?... தெரியாது!

[அந்தச்சமயத்தில் பொன்னுரங்கமும், கண்ணம்மாவும் வருகிறார்கள்.]

பல: அடேடே....கண்ணம்மா வந்துட்டுதே!...போலீஸ் காரங்க பலே பேர்வழிகள் தான்!...ராத்ரிதான் ரிப்போர்ட் கொடுத்தோம்... அதுக்குள்ளே காணாமப் போன பொருளை கொண்டாந்து சேத்துட்டீங்களே...

உக்காருங்க...காப்பி சாப்பிடறீங்களா?...

பொன்: பரவாயில்லே... ரொம்ப நன்றி!...கண்ணம்மா அவுங்க அப்பா மேல் வெறுப்பாத்தான் வெளியேறியிருக்கு!...

சம: என்மேல் வெறுப்பா?... உனக்கு என்ன கெடுதி செஞ்சேம்மா நான்?

பொன்: அது இஷ்டத்துக்கு விரோதமா கல்யாணம் பண்ண தீர்மானிச்சிட்டிங்களாம்...அதனாலே அதுக்கு மனசுகஷ்டம் ஏற்பட்டு...

சம: என்னய்யா இஷ்டத்துக்கு விரோதம்?

லட்சாதிபதி! கோடீஸ்வரன்! அவனுக்கு மனைவியா ஆகிறது பிடிக்கலியா?...

பொன்: அதெல்லாம் நான் சொல்ல வேண்டிய புத்தியெல்லாம் சொல்லி கண்ணம்மா மனசை மாத்திட்டேன்—இப்ப உங்க இஷ்டப்படியே கல்யாணம் பண்ணிக்க கண்ணம்மா தயார்!...

சம: என்னது! கண்ணம்மா தயாரா?... கண்ணம்மா!...... உனக்கு எப்பம்மா இந்த அறிவு வந்துச்சு?

ண்: அப்பா! என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் அப்பா!... ஏதோ ஒரு கிரகத்தின் கோளாறு என் புத்தி சரியில்லாமல் போய் உங்களை எதிர்த்துப் பேசி விட்டேன், என்னை மன்னித்து ஏற்றுக் கொள்ளுங்கள் அப்பா!...

பொன்: ஆமாம்...தவறு செய்தவர்கள் தங்கள் தவறை உணரும் போது மன்னிப்பதுதான் சிறந்த குணம்!...

பல: உண்மை! உண்மை!... மாஸ்கோ ஏஜண்டுகளாயிருந்த கம்யூனிஸ்டுகள் இப்போது தங்கள் தவறுக்காக வருந்தும்போது நாமே அவர்களை மன்னிக்கவில்லையா; அதுபோல!...

சம: மன்னிப்பதென்ன? என் மகள் மனம் மாறிவிட்டது என்று கேட்பதைவிட மகிழ்ச்சி வேறுஎன்ன இருக்கிறது எனக்கு!...... மன்னிப்பும் வேண்டாம் ஒரு மண்ணாங்கட்டியும் வேண்டாம் இனிமேல்!...

பொன்: மண்ணாங்கட்டி எதற்கு? இனிமேல்தான் பொன்கட்டிகளாகக் குவியுமே!...

பல: ஏன்; மண்ணாங்கட்டியும் குவியும்—அய்யா எங்கேயாவது பேசப் போனால்...

சம: ஓய் பலவேஷம்! (ஆத்திரமாக)

பலவே: மன்னிக்கவும்...நான் அவரு இருப்பதை மறந்து உண்மையைச் சொல்லிட்டேன்...மன்னிக்கவும்...

(அப்போது ஆபீஸ் பையன் வருகிறான்.)

பையன்: எஜமான்!...தேர்தல் பிரச்சாரத்திற்காக ஒரு ஒலி பெருக்கி வந்திருக்கிறது—உங்களை உடனே பார்க்கவேண்டுமாம்!

சம:—ஒலி பெருக்கி, என்னைப் பார்க்கவேண்டுமா?

பையன்: ஆமாம்—இந்த ஒலி பெருக்கியின் பெயர் கறுப்பன்!...

சம: யாரு? தியாகி கறுப்பனா?...அய்யோ!...அவன் இங்கே ஏதாவது ஆனை மூஞ்சிப் பிள்ளை வீட்டில் நடத்தியது போல...

(பயப்படுகிறார்)

பல: இருக்காது—இருக்காது! நான்தான் அவனை வரச்

என்றுதான் திருந்துவரோ?

இரங்கூன் நகரில் உள்ள வீதிகளின் ஆங்கிலப் பெயர்கள் மாறுகின்றன.

தாம்சன் வீதி—பூந்தட்டான்பையா வீதியாக மாறிவிட்டது. மங்கமாரி வீதி—போஜோ தெருவாக மாறியது. இன்னும் எழுதிக்கொண்டே போகலாம்.

இவ்வாறு இங்கு ஆங்கிலப் பெயர்கள் அகற்றப்படும் வேளையில் தமிழ் நாட்டிற்கு "தமிழ் நாடு" என்று பெயரிட மறுக்கும் தமிழ் அமைச்சர்களின் போக்கைக் கவனிக்கத்தான் வேண்டும்.

தமிழ் நாட்டின் வீதிகளுள் காணப்படும் அன்னியப் பெயர்கள் அகலுமா? பர்மாவைப் பார்த்த பின்னராவது மாற்றிக்கொள்ளக் கூடாதா? தன்மான உணர்ச்சி எப்பொழுது உதயமாகும்?

—'தந்தி'(16—11—56) ரங்கூன்.

சொல்லியிருந்தேன் ....
நமது தேர்தல் பிரச்சாரத்துக்கு அவன்தான் சரியான ஆள்!...கொஞ்சம் சம்பளத்தை கூடக் கொடுத்து...கொஞ்சம்..... எல்லாம் கொடுத்துட்டா ...அவ்வளவுதான் குஷி பிறந்திடும் பயலுக்கு! அப்புறம் நமக்கு பிரச்சாரக் கவலையே இல்லை!...

ஏனய்யா—தேர்தல் பிரச்சாரத்துக்குத்தான் நேருவே வர்ராரே; அது போதாதா?

போதாதுங்க போதாது! ...இந்தத் தடவை நேரு பிரச்சாரம் அவ்வளவா செல்லுபடியாகாது... ஏன்னு; புயல் அடிச்சப்ப வராத நேரு—ரயில் கவிழ்ந்தப்ப வராத நேரு—ஓட்டு கேட்க மாத்திரம் வர்ராரு! அப்படின்னு இப்பவே எல்லாரும் பேசிக்கிறாங்க!...

: அதுவும் சரிதான்—அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் போக முடியுது: அடிப்பங்கரையில் இருக்கிற அரியலூருக்கு வந்திருக்கப்படாதோ?.......... ஓய் போலீஸ்காரரே!...... இங்க பேசினதை யெல்லாம் வெளியிலே சொல்லிடாதீர்!...

ான்: அய்யோ அதெல்லாம் சொல்ல மாட்டேங்க!... நமக்கு மந்திரி காதுங்க! இந்தக் காதில வாங்கி இந்தக் காதால விட்டுட்டுப் போய்டுவேன்!...

: சரிதான் .. போலீசில்கூட தி. மு. க. ஓட்டை அடிக்கிறாப்ல இருக்கு!......

: ஆமாம்ப்பா......அவுங்க தொப்பி கூட சிவப்பும் கருப்பும்தானே......

யன்: நான் என்னு எஜமான் சொல்ல; வெளியிலே நிக்கிறவரு கிட்டே?

: அவரை அழைச்சிகிட்டு வா!...அழைச்சிகிட்டுவா!

பையன் போய், கறுப்பன் வருகிறான். கறுப்பம் கண்ணம்மாவும் ஜாடை கப் பார்த்துக் கொள்ளுகிறார்கள்: பொன்னுரங்கம் டெபெற்றுக் கொண்டு புறப் கிறான். போகும் போது னும், கறுப்பனும் ஒருவருக் ருவர் மாறி மாறி "மன் த்துக் கொள்ளுங்கள்!" று கூறிக் கொள்ளுகிறார் . கறுப்பன் சமயோஜிதம் ளையை வணங்குகிறான்.)

: வா கறுப்பா வா!... என்ன சௌக்கியந்தானே?

ப்:, ஒன்பது வருஷமா ஒரு குறைவுமில்லாம இருக்குங்க!..........

விரைவில் துவக்கம்!

ஆசிரியர்

மு. க. வின்

சுருளிமலை

புதிய தொடர்கதை

சுதந்திர சர்க்காரிலே சௌக்யத்துக்கென்ன குறைவு!

சம: உக்காரு!...ம்...நான் நிக்கிறதா முடிவு பண்ணியிருக்கேன் உனக்குத் தெரியுமா?...(எழுதல்)

கறுப்: வேண்டாங்க......உக்காந்தே பேசுவோம்...உக்காருங்க!

சம: அட....இது இல்லப்பா... எலக்ஷனிலே நிக்கிறதா முடிவு பண்ணியிருக்கேன்—உன் அபிப்பிராயம் என்ன?

கறுப்: தாராளமா நிக்கலாம்!... உங்களை இந்தத் தடவை யாராலும் தோற்கடிக்க முடியாதுன்னு ஊர்ல இப்பவே பேச ஆரம்பிச்சுட்டாங்க!...

சம: பிரச்சார வேலை யெல்லாம் ஆரம்பமாகணும்; அதுக்குத்தான் உன்னைக் கூப்பிட்டு வரச் சொன்னேன்...நீ வரவே இல்லை!

கறு: இல்லீங்க...முன்னே ஒரு தடவை...நேத்தியெல்லாம் வந்தேங்க!......நீங்கதான் வீட்ல இல்லை!...அதுக்கு என்னாங்க; உங்களைப் பத்தி பிரமாதமா பிரச்சாரம் பண்ணிடுறேன்!...

சம: இன்னையிலேயிருந்து எலக்ஷன் முடியறவரையிலும் நீ தேர்தல் பிரச்சாரத்திற்காக தொகுதி பூரா சுற்ற வேண்டும்... ஒரு நாளைக்கு இரண்டு கூட்டம் மூணு கூட்டம் நடந்தாக வேண்டும்!

கறு: முப்பது கூட்டம் கூடப் பேசுவேன்...என்னோடு துணைக்கு ஒரு பிரச்சாரகரும் இருந்துவிட்டால்...

சம: இதோ பலவேஷத்தை அழைத்துக் கொண்டு போ!...

பல: அய்யோ...நான் போய் விட்டால் எலக்ஷன் நேரத்தில் பண வரவு செலவெல்லாம் யார் பார்ப்பது?

சம: அதுவும் சரிதான்!

கண்: எம்ப்பா!...நானும் போகிறேனே; பிரச்சாரத்திற்கு!

சம: நீயா?

கண்: என்னப்பா பயப்படுகிறீர்கள்...நம்ப நேருவின் சகோதரி இந்தியா மண்ணை மிதித்து எவ்வளவோ காலமாகிறது—அந்தக் காங்கிரஸ் மகா சபையின் புனிதக் கொள்கைகளைப் பரப்ப வெளியூர்களுக்குப் போனால் என்ன?

பல: ஆமாம்—பெண்கள் பிரச்சாரம் செய்தால் பெண் ஓட்டர்களைக் கவர முடியும்!

கண்ணம்மா சொல்வது எனக்கும் பிடிக்கிறது!

சம: அப்படியானால் ... கல்யாணம்......

கண்: கல்யாணத்துக்கு நாளெல்லாம் பாருங்களேன் அப்பா!...

கல்யாணம் பாட்டுக்குக் கல்யாணம்; எலக்ஷன் பிரச்சாரம் பாட்டுக்குப் பிரச்சாரம்! இப்போதே அவருக்குச் சொல்லி விடுங்களப்பா!

சம: யார்—ஆனை மூஞ்சிப் பிள்ளைக்குத் தானே? இதோ இப்போதே ஆள் அனுப்புகிறேன். பலவேஷம்! உடனே ஓடும்!...அவரிடம் விஷயத்தைச் சொல்லும்-அவரே இங்கு ஓடி வருவார் நாள்பார்க்க!

கறு: அதோடு ஒருசிறு வேண்டுகோள் — எனக்கும் அவருக்கும் கொஞ்சம் மனத்தாங்கல் ஏற்பட்டு விட்டது!...என் மீது அவர் கோபமாயிருப்பார்...... அவரை சமாதானப் படுத்தி...

சம: "கண்ணம்மா சம்மதம்" என்ற சேதி காதில் விழுந்தாலே அவர் எல்லாவற்றையும் மறந்து விடுவார்! ஏன்; நீயும் பலவேஷத்துடன் அவர் வீட்டுக்குப் போய் திருமணச் சேதியைச் சொல்லேன்; திருப்தியாகி விடும் அவருக்கு!

கறுப்: அப்படியே போகிறேன்!

சம: சீக்கிரம் போங்கள்!...

கண்: வரும்போது...தேர்தல் பிரச்சாரத்திற்காக வேண்டி காங்கிரஸ் மகா சபை சரித்திரப் புத்தகம் ஒன்று வாங்கி வாருங்கள்!

கறு: அய்யே...அது ஏன் அது! ......அப்ப இருந்த காங்கிரசா இப்ப இருக்கு; அது வேற ஜனங்கள் குழப்பமடையப் போறாங்க!...... (போகிறான் பலவேஷமுடன்)

சம: ஆமாம் ஆமாம் அதுவுஞ் சரிதான்... இந்தப்பாரும்மா—அதெல்லாம் படிச்சு கிடிச்சு பேசாதே!......... சும்மா ஏதாவது "டப்டுப்" புன்னு நாலுபேசு!... அண்ணாதுரைக்கு என்ன தெரியும்; நெடுஞ்செழியனுக்கு என்ன தெரியும்—எல்லாம் எனக்குத்தான் தெரியும்னு...அடிச்சு விட்டென்னு "அப்ளாஸ்" பொறியாது?...

(திரை விழுகிறது.)

—தொடரும்.—

:: தி. மு. கழக முரசு கொட்ட ::

'போர்வாள்'

மீண்டும் ஜனவரி முதல் வருகிறது

தனி இதழ் அணு 0 2 0 ஆண்டு சந்தா ரூ. 6 8 0

எல்லா ஊர்களுக்கும் முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை.

"போர்வாள்" அலுவலகம், 128, பிராட்வே, சென்னை.

காதலுக்கு ...

5-ம் பக்கத் தொடர்ச்சி

அக்குதிரையேறி பதுங்குமலை செல்ல வேண்டும். நாளை இரவிற்குள் அங்கு போய்ச் சேர்ந்து விடுவோம். அங்கே உன் தந்தையின் அந்நாள் நண்பர்கள் பலர் குழுமி நம்மை வரவேற்பர். அவர்கள், மக்கள் புரட்சிக்கு ஏற்கனவே விதை தூவியிருப்பர். பல பிரபுக்களையும், பெருமக்களையும், பணத்தாலும், எதிர்கால பதவியளிப்பு உறுதியாலும் நம் பக்கம் இழுத்திருக்கிறேன். படை வீரர் பற்றிய பயமில்லை. ஏனெனில் மன்னன் இறந்தான் என்ற செய்தி கிடைத்த மறுகணமே நம் பக்கம் வந்திடுவர்.

ஆள: (உறுதி கலந்த குரலில்) என்னால் இந்தத் திட்டத்தை ஏற்க முடியாது.

ப: என்ன? முடியாதா? இது தவிர வேறு திட்டம் தயாரிக்க முடியாது, தம்பி. அனுபவமிக்க உன் அண்ணனின் ஏற்பாடு—மறுக்காதே—ஒப்புக் கொள். உம்...காரியத்தை முடி, கணத்தில்—போவோம்.

ஆள: அண்ணா, என்னுடைய முடிவை தெளிவாகத் தெரிந்து கொள்ளுங்கள்—நான் மன்னன் புலிவலனைக் கொல்லப் போவதில்லை.

ப: என்ன? இல்லை, இல்லை. என் காதுகள்தான் துரோகிகள்—தம்பி, நீ பேசு—வயது வளர்ந்து, என் புலனறிவு சக்திகளைக் குறைத்துக் கொண்டே வந்து விட்டது. நான் வயதேறிப் போனவன். ஆகவே காதுகள் தெளிவாகக் கேட்கும் சக்தி பெற பெறவில்லை! 'இதோ என் இடையிலே சொருகி யிருக்கும் உன் தந்தையின் வாளால், மன்னன் புலிவலனைக் கொன்றிடப்போகிறேன்'—இப்படித்தானே கூறினாய்?

ஆள: இல்லை; நான் மன்னனைக் கொல்லப்போவதில்லையென்று சொன்னேன்.

ப: நீ அப்படிச் சொல்லவில்லை—சொல்லமாட்டாய்—சொல்லக் கூடாது—சொல்லும்படி விடமாட்டேன் — காற்று புயலாகி, உன் வார்த்தைகளை மாற்றி, என் செவிகளில் அப்படி ஒலிக்கும்படிச் செய்து விட்டன போலும்—ஆம், அப்படித்தான் நினைக்கிறேன்!

ஆள: அண்ணா, தங்கள் செவிகள் செம்மையாகவே உள்ளன—காற்றும். என் வார்த்தைகளை மாற்றிவிட வில்லை. நான் மன்னனைக் கொல்லப் போவதில்லை; இது திண்ணம்!

ப: அப்படியானால், பழி வாங்கப்பட்ட உன் தந்தையின் பழி தீர்க்க வழி என்ன தம்பி?

ஆள: இந்தக் கிழ மன்னனின் குருதி, என் இரு கரங்களில் வழிவதைக் கண்டு மறைந்து போன என் தந்தை மகிழ்வார் என்றா கருதுகிறீர்கள்?

ப: மகிழ்வாரா என்றா கேட்கிறாய்? மகிழ்ச்சி மிகுதியில் கூத்தே ஆடுவார்!

ஆள: நான் அப்படி நினைக்கவில்லை, அண்ணா. இறந்தவர்கள், உலகில் நாம் பெற்ற அறிவைவிட சிறந்த அறிவு பெற்றிருப்பர் என்று கருதுகிறேன். மனிதருக்கு மனிதன் பழி வாங்க வேண்டியதில்லை. பழியே, சரியான நேரத்தில் பழி வாங்கிவிடும்!

ப: புதிய வேதாந்தம் பேசுகிறாய், தம்பி.

ஆள: வேதாந்தமல்ல; தெளிந்த சிந்தனை அண்ணா. ஆம், நான் முடிவாகச் சொல்கிறேன், மன்னனைக் கொல்ல மாட்டேன்.

ப: மன்னனைக் கொல்லாத நீ, இந்நேரத்தில் இங்கு வருவானேன்?

ஆள: இதோ என் திட்டம்—கேளுங்கள் அண்ணா! நான் இப்போது மன்னன் உறங்கும் அறைக்குச் செல்லப் போகிறேன். அவன் மார்பின்மீது தந்தையின் வாளையும், இந்தக் கடிதத் துண்டையும் வைக்கப் போகிறேன். அவன் விழித்து எழுந்து, இதனைப் பார்த்து தன்னைப் பழி தீர்க்க ஆள் இருக்கிறான் என்பதையுணர வேண்டும். தினந்தினம் அஞ்சிட வேண்டும்—ஆனால் அவனைக் கொல்லக் கூடாது. இதுதான் உயர்ந்த முறையில் பழிவாங்கியதாக ஆகும் என எண்ணுகிறேன்.

ப: ஐயோ! பரிதாபத்துக்குரிய தந்தை- மன்னர் வெள்ளை மனத்தான் முன்னர்தான் துரோகத்தால் துளைக்கப்பட்டார்! இதோ, மறுமுறையும்—அதுவும் தன் சொந்த மகனாலேயே! ஐயோ, தகாத வார்த்தைகளைப் பேசிப் பொழுதைத் தள்ளாதே—கோழையாகாதே! வீரன் பெற்றெடுத்த வெற்றி வீரனாகப் போ—மன்னன் புலிவலன் மாளிகையினுள் போ—ஒளி உமிழும் உன் உடைவாளை அந்தத் துரோகியின் இருதயத்துள் பாய்ச்சு—இரக்கமற்ற அவன் இருதயத்தை, வாள் முனையால் கொத்தியெடுத்துவா—வந்து காட்டிவிட்டுப் பேசு, இந்த கண்ணியம், பெருந்தன்மை, நீதி, தூய்மை எல்லாம்!

ஆள: அண்ணா, தங்களின் இதய ஓரத்தில் வீற்றிருக்கும் பெருந்தன்மையின்மீது ஆணையிட்டுக் கேட்கிறேன். அதன் பக்கத்தில், என் தந்தையிடம் தாங்கள் கொண்ட ஆருத பற்று, அன்பு இவைகள் மீதும் ஆணையிட்டுக் கேட்கிறேன். என் அன்புத் தந்தை—கண்ணியமிக்க கனவான்—வாட் போரில் வல்லமை மிக்க பெருவீரன்—கருணை மிக்க பெருந்தலைவன்—தன் மகனை கள்ளன் போல, நள்ளிரவில், தள்ளாத வயதுடைய ஒருவனை, அவன் எவ்வளவோ பொல்லாத குணமுடையவனாக இருந்தாலும் கொல்லுவதையா எதிர்பார்ப்பார்—அண்ணா, நீங்களே சொல்லுங்கள்.

ப: தம்பி, நீ தந்த வாக்குறுதியை மறந்து விட்டாயா? யோசித்துப் பார் — மேலும் ஒரு உண்மையையும் தெரிந்து வைத்துக்கொள். நீ மன்னன் மனைவி பொன்மேனியாளின் மீது மயக்கங் கொண்டுள்ளாய் என்பதை நான் அறிவேன் — அவள் போதையிலே இப்படி மனம் பேதலித்திருக்கிறாய்.

ஆள: அண்ணா, அப்படி அவள் மீது பழி சுமத்தாதே! அவள் வெண்ணொளி வீசும் தண்ணிலவு போன்று தூய்மையானவள்! இதோ, மின்னும் நட்சத்திரங்களைவிட ஒளி மனம் பெற்றவள்.

ப: ஐயோ, இன்னும் இவன் அவள் ஊட்டிய காதல் மயக்கத்தில் கட்டுண்டு கிடக்கிறான்! தெளியவில்லையென்பது தெளிவாகத் தெரிகிறது. கோழை மனம் படைத்த முட்டாளாகி விட்டானே! (அவனைப் பார்த்து) தம்பி, உன் வாழ்விலே காதல் உன் விளையாட்டு பொம்மையாக இருக்க வேண்டும்-நீ அதன் விளையாட்டு பொம்மையாக ஆகிவிடக் கூடாது!

ஆள: அண்ணா, பேச மட்டுமே தங்களால் இப்போது முடியும்—நீங்கள் கிழப் பருவத்தின் தாழ்வாரத்தில் நடை பழகுகிறீர்கள்.

ப: நீ மன்னனைக் கொல்லப் போவதில்லை...?

ஆள: இல்லை!

ப: ஐயோ, புலி, பூனையைப் பெற்ற கதையாகி விட்டதே! வீரனின் கோழை மகன் இவன் என்பது இப்போதல்லவா தெரிகிறது! பெற்ற தந்தையை ஒருவன் விலைகூறி விற்றான் கொலைகாரனிடம்—அந்தப் பாதகன் யாரென்று தெரிந்தும், இவன் பாகவதர் செய்யும் கதாகாலட்சேபம் செய்கிறான்!

ஆள: அண்ணா, நான் கோழையல்ல! மன்னனை, முதல் முதல் பார்த்தேனே, அக்கணமே, அந்த இடத்திலேயே வெட்டி வீழ்த்தியிருப்பேன்—தடுத்தது தாங்கள் அண்ணா—மறக்க வேண்டாம்.

ப: அப்போது காலங் கனியவில்லை என்பதாலே தடுத்தேன்—இதோ, இப்போது தக்க காலம் வந்துவிட்டது—ஆனால், பேடியின் பேச்சல்லவா பேசுகிறாய் நீ!

ஆள: பேடியின் பேச்சல்ல அண்ணா — பெருந்தன்மையான பேச்சு இது—பழி வாங்க வேண்டும்—ஆனால், கண்ணியமான வழியிலே! அதுதான் என் முடிவு. உங்கள் உடலில் இளமைப் பருவத்தின் இன்பத் துடிதுடிப்பு இருக்க நியாயமில்லை. அழகுக் கோவிலின் அற்புத வாயிலை தங்கள் வயதான கண்கள் பார்க்க மறுக்கின்றன. தங்கள் செவிகள், உலகத்திலே பாடும் காதல் கீதத்தைக் கேட்க மறுக்கின்றன. நீங்கள் காதலைப் பற்றிப் பேசுகிறீர்கள் — அந்தக் காதலின் சிங்காரக் கதையை நீங்கள் அறிய மாட்டீர்கள்!

ப: தம்பி, நீ அரும்பு—நானோ மலர்ந்து, இப்போது வதங்கி விழ வேண்டிய மலர். அரும்பு மலருக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த கதையாக இருக்கிறது! என் இளமைக் காலத்துக் கதைகளைப் பற்றி சொல்லவா தம்பி!

● தொடரும் ●

தி. மு. க. தலைமை நிலையச் செய்தி :

தி. மு. கழக

மத்திய செயற்குழுக் கூட்டம்

29--12--56

சனியன்றும்,

பொதுக்குழுக் கூட்டம்

30--12--56

ஞாயிறன்றும்

சேலத்தில்

நடைபெறும்.

அருமை நண்பன்

• ஜெர்மன் மூலம் :
ஹெர்மன் கெஸ்டன்

ஆண்டன் லெளபர் தன் அறையில் அமர்ந்து சிந்தனையில் ஈடுபட்டிருந்தார். மியூனிச் நகரத்தில் அவர் தங்கப்போகும் கடைசி நாள் இதுதான். பிறகு அவர் பெர்லினுக்குப் புறப்பட்டு விட வேண்டும். பிளாம் குடும்பத்தார் தந்த அறையில் அவர் இவ்வளவு நாட்கள் இருந்ததால், அவரது பிரிவுபசாரத்திற்காக நேற்றே அக்குடும்பத்தார் ஒரு விருந்து நடத்தி விட்டார்கள். லெளபரின் திட்டப் பிரகாரம் நேற்றைய தினமே அவரும் புறப்பட்டுப் போயிருக்க வேண்டும். ஆனல் லெளபர் ஒரு நாள் தனது பிரயாணத்தை ஒத்திப் போட்டிருந்தார். பிளாம் குடும்பத்தார் அதனல் வருத்தமோ மகிழ்ச்சியோ அடைந்ததாக வெளியில் காட்டிக் கொள்ளாமல் அவரை மேலும் ஒரு நாள் தங்கள் வீட்டு அறையில் தங்க அனுமதித்தார்கள்.

தனிமையில் இருக்கும்போது மனிதன் ஏதாவது ஒரு பாட்டை முணுமுணுப்பது சகஜம். லெளபர் சாய்வான நாற்காலியில் அமர்ந்து ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருந்தார். கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது. லெளபர் கதவைத் திறந்தார். ஆச்சரியத்தினல் அவரது கண்கள் அகல விரிந்தன. ஏனெனில் பிளாம் குடும்பத்தார் கையில் உணவு வகைகளோடு வெளியில் நின்றிருந்தார்கள்.

"நீங்கள் இங்கிருக்கும்போது எங்களால் தனியாக சாப்பிட முடியவில்லை. அதனல் உங்கள் அறையில் அமர்ந்து எல்லோருமாக உணவருந்தலாம் என்ற முடிவோடு இங்கு வந்திருக்கிறோம். உங்களுக்கொன்றும் ஆட்சேபனை இல்லையே?" என்றார் ஆர்தர் பிளாம். குடும்பத் தலைவர் அவர்.

லெளபர் தனது சம்மதத்தைத் தெரிவித்துவிடவே குடும்பம் உள்ளே நுழைந்தது. ஆர்தரும் அவரது மனைவியும் ஒரு பக்கம் உட்கார்ந்து கொள்ள, அவர்களுடைய மூன்று புதல்விகளும் லெளபரின் இரு பக்கத்திலும் அமர்ந்தார்கள். புதல்விகள் மூவருக்கும் வயது இருபதிலிருந்து—இருபத்தைந்துக்குள்தான் இருக்கும். நல்ல அழகிகள். விருந்து சாப்பிட ஆரம்பித்தவுடன் பேச்சும் ஆரம்பமாகியது.

"உங்கள் பிரிவு எங்களுக்கு அதிக மனக் கஷ்டத்தைக் கொடுக்கிறது லெளபர். உங்களைப் போன்ற நண்பர் எங்களுக்கு இனி கிடைப்பாரா என்பது சந்தேகந்தான்—" என்றார் ஆர்தர்.

அந்தப் புகழ்ச்சியை லெளபரால் தாங்க முடியவில்லை. தலை குனிந்தார். வேண்டுமென்றே தன்னை ஆர்தர் புகழ்கிறாரா என்ற சந்தேகம் அவருக்கு. அதனல் தலை நிமிர்ந்தார். நாற்பத்தேழு வயதான ஆர்தரை என்றுமே அவர் நண்பராக மதித்ததில்லை, இன்று மட்டும் மதிக்க முடியாது!

ஆர்தர் பிளாம் பிரதம மாஜிஸ்திரேட்டாக வேலை பார்த்தவர். ஆனல் யுத்தத்திற்குப் பிறகு அவர் சாதாரண மாஜிஸ்திரேட் பதவிக்கு தள்ளப்பட்டார். அதற்குக் காரணம் 1939-ம் வருடத்தில் ஆர்தர் தேசிய சமதர்மக் கட்சியில் சேர்ந்ததுதான். இப்போது அவர் நாஜி கோர்ட் தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். உயர்ந்த பதவி மீண்டும் கிடைக்கும் என்ற நம்பிக்கை அவருக்கு!

நல்ல உயரம்—நரைத்த தலை—குடிகாரனைப் போன்று சிவந்து காணப்பட்ட கன்னங்கள்—ஒளி பொருந்திய கண்கள். திறமை மிக்க பேச்சு. இதுதான் ஆர்தர்.

லெளபரிடம் எதையோ எதிர்பார்த்து அதற்காக அவரை ஆர்தர் புகழ்ந்தால், தோல்விதான் கிடைக்கும் அவருக்கு!

மதுக் கோப்பைகளை நிறைத்து விட்டு ஆர்தர் பேசலானர்.

"லெளபர் நீங்கள் கண்யமானவர். நீங்கள் என்னைப் பற்றி ஒரு முடிவுக்கு வரக்கூடும். அதனல் தான் இப்போது என் வாழ்வில் நடந்த அந்தரங்கமொன்றை உங்களுக்குச் சொல்லப் போகிறேன். அதன் மூலம் நீங்கள், நான் உண்மையில் குற்றவாளியா — (ஓரளவுக்கு கொலைகாரன்), இல்லையா என்பதை அறிய முடியும். உங்கள் அபிப்பிராயம் நன்ருக இருந்தால், மீண்டும் நீதிபதிப் பதவி எனக்குக் கிடைக்கும் என்ற மனேதைரியம் எனக்கு உண்டாகும். இதுவரை இக்கதையை நான் யாரிடமும் சொன்னதில்லை."

ஆர்தரின் மனைவி குறுக்கிட்டாள்.

"அவ் விஷயங்களைப் பற்றி இப்போது மீண்டும் பேசுவானேன? நடந்து விட்டது!"

"நீ பேசாமலிரு.....லெளபரைப் போன்ற ஒரு நல்ல மனிதரின் அபிப்பிராயம் எனக்கு மிகவும் தேவை" என்று மனைவியை அடக்கி விட்டு அவர் பேச ஆரம்பித்தார்.

லெளபர் வாயைத் திறக்காமல், தட்டைக் காலி செய்யும் வேலையில் ஈடுபட்டிருந்தார்.

"எனக்கு சிக்பிரெட் என்ற ஒரு பள்ளித் தோழன் உண்டு. சில வருடங்களில் அவன் காசல் நகரத்திற்கு, நகராட்சி கலைப் பொருட்காட்சியின் அதிகாரியாகப் போனன். அவனைப் பார்த்தால் ஒரு ஓட்டல் தொழிலாளியைப் போலிருக்கும். ஆனல் விஷயஞான முள்ளவன்—பதினரும் நூற்றுண்டில் வாழ்ந்த ஒரு சித்திரக்காரனைப் பற்றி அவன் ஒரு புத்தகம் கூட எழுதியிருந்தான்.

1939-ம் வருடத்தின் ஜனவரி மாதத்தில் ஒரு நாள் மாலை. சிக்பிரெட் என்னைத் தேடிக் கொண்டு என் வீட்டுக்கு வந்தான். பாரிஸில் இருந்த ஜெர்மன் காரியாலயத்தைச் சேர்ந்த வாம்ராத் என்பவனை யாரோ ஒரு யூதன் கொன்று விட்டானும், அதனல் சிக்பிரெட்டை கைது செய்து விட்டார்கள். காரணம் என் நண்பனும் ஒரு யூதன். அவனை சித்திரவதை செய்தபின், ஜெர்மனியை விட்டுப் போய்விடுவதாக வாக்குப் பெற்றுக்கொண்டு அவனை அதிகாரிகள் விடுதலை செய்திருக்கிறார்கள். அவன் மனைவியாக இருந்தவள், அவன் பால் இரக்கம் கொண்டு தன் புதிய கணவனிடம் சொல்லி ஒரு 'பாஸ்போர்ட்' கூட தயார் செய்து கொடுத்து விட்டாள். ஆனல் சிக்பிரெட்டுக்கு ஜெர்மனியை விட்டுப் போக இஷ்டமில்லை. காரணம் என்னவென்றால் அவன் மூதாதையர்களெல்லாம் ஜெர்மனியில் பிறந்து, இறந்தவர்கள். ஹாம்பர்க்கில் கப்பல் ஏறுவதற்குப் பதிலாக, சிக்பிரெட் நோராக மியூனிச்சுக்கு, என்னிடம் வந்து விட்டான்.

"உன்னை நம்பிவந்து விட்டேன். எனக்கு ஏதாவது வழி செய்!" என்றான், அவன். நான் சர்க்கார் ஊழியன். மேலும் எந்தக் கட்சியிலும் இல்லாதவன். அவனுக்கு என்ன உதவி செய்யக் கூடும் என்றே எனக்குத் தெரியவில்லை. அதனல் இருவரும் என் மனைவி பெலாவிடம் யோசனை கேட்டோம்.

சிக்பிரெட் உண்மையில் கொலைகாரனல்லவென்பதை நிச்சயம் செய்து கொண்டபின்தான், பெல்லா சிக்பிரெட்டை எங்கள் வீட்டில் அரை இரவு தங்க அனுமதித்தாள். நான் அவளுக்கு நிலைமையை எடுத்துச் சொன்னேன். ஆனல் அவள் சிக்பிரெட் குற்றவாளியல்ல.........அதனல் அவன் இங்கு இரவைக் கழிக்கலாம் என்று தீர்மானமாகச் சொல்லி விட்டாள். சிக்பிரெட் எனது மூத்த மகள் மரியத்தின் அறையில் படுத்துக் கொண்டான். என் மகளோ ஒரு சோபாவில் சுருண்டாள்.

1939-ம்வருடத்தில், மியூனிச் நகரத்தில் ஒரு யூதனுக்கு கிறிஸ்தவர் இல்லத்தில் தங்க இடம் கிடைத்ததென்றல் அதற்கு எவ்வளவு தைரியம் இருந்திருக்க வேண்டும்?

மறு நாள் சிக்பிரெட் போய் விடுவதாகத்தான் சொன்னன். ஆனல் பத்திரிகையில் வந்திருந்த செய்திகளைப் படித்தபின், அவன் வீட்டை விட்டு வெளியேறினல் உயிரோடு இருக்க மாட்டான் என்பதை அறிந்த என் மனைவி, அவனை வெளியே அனுமதிக்கவில்லை. எனக்கும் அவளுக்கும் இந்த விஷயமாக சண்டைகூட நடந்தது ஆனல் ஜெயித்தது அவள்தான். சிக்பிரெட்டால் கூட அவளை எதிர்க்க முடியவில்லை. கடைசியில் அங்கே தங்கினன். அவனுக்கென்று தனியாக ஒரு அறை ஒதுக்கப்பட்டது, அவன் எங்கள் வீட்டில் இருப்பதே வெளியில் யாருக்கும் தெரியாத வகையில் எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன: இவ்வளவு செய்தும் சிக்பிரெட் வெளியில் போய் விடவே விரும்பினன். அவனல் எங்கள் குடும்பத்திற்குத் தீமை ஏதும் வந்து விடக்கூடாது என்ற எண்ணத்தில்! அறையில் அடைபட்டுக் கிடந்தவன் பேசாமல் இருக்காமல் குருன்வால்டு என்ற ஓவியனைப் பற்றி ஒரு புத்தகம் எழுதி என் பெண்களுக்கு வாசித்துக் காட்டினன். ஆனல் அதை எங்கள் வீட்டில் வைத்துக் கொள்ள பயந்து நாங்கள் எரித்து விட்டோம்!

முதலில் அன்னியன் ஒருவன் எங்கள் வீட்டிலிருப்பது எல்லோருக்கும் சங்கடமாகத்தான் இருந்தது. ஆனல் நாளடைவில் எல்லாம் பழக்கப்பட்டுப் போய் விட்டது. அடுத்த மாதத்தில் சிக்பிரெட் என்னைத் தூண்டாமலே, நான் தேசிய சமதர்மக் கட்சியில் அங்கத்தினனகி விட்டேன். கட்சி அங்கத்தினன் என்றல் என்னை யாரும் சந்தேகிக்க மாட்டார்கள். சிக்பிரெட்டுக்கு ஆபத்தும்குறைவு இதில் சுயநலமும் கொஞ்சம் இருந்தது நான் குடும்பத்தின் தலைவன் அல்லவா?

யுத்தம் ஆரம்பமாகி விட்டது. எங்களுக்கும் தொந்தரவு அதிகமாகிவிட்டது. சிக்பிரெட்டை ஒவ்வொரு தடவையும்எங்காவது ஒளித்து வைத்து. மற்றவர் கண்களிலிருந்து அவனைக் காப்பாற்றுவாள் என் மனைவி. இந்தத் தொந்தரவுக்கெல்லாம் காரணமான அவனை, "நீ ஏன் சுவிட்ஜர்லாந்துக்கு ஓடி விடக் கூடாது" என்று நான் கேட்டேன்.

"உனக்கு ஏன் தொந்தரவு, கொஞ்சம் விஷம் கொடுத்து விடேன்!" என்றன் அவன். எனக்குக் கோபம் வந்தது. அவனுடன் சண்டையிட்டேன். ஹிட்லர் பாரிஸ் நகருக்குள் புகுந்த தினத்தன்று எங்களுக்குள் கைகலப்பு நடக்கவிருந்தது. நல்லவேளை! இருவரும் அழுதே சமாளித்து விட்டோம்!!

என் பெண்கள் வயது வந்தவர்களல்லவா? அவர்களுடைய நண்பர்கள் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவார்கள். அதில் ஸ்ட்ராசென என்ற வாலிபன் ஒருவன். கடைசி மகளைக் காதலித்த அவன், முடிவாக என் மூத்த மகள் மரியத்திடம்தான் காதலைப் பெற முடிந்தது. ஸ்ட்ராசென அடிக்கடி வீட்டுக்கு வந்து பேசிக் கொண்டிருப்பான். ஒரு நாள் பதினரும் நூற்றண்டு ஓவியனைப் பற்றிப் பேச்சு வந்தது. பேச்சுவாக்கில் அவன், சிக்பிரெட் எழுதிய அந்த ஓவியனைப் பற்றிய புத்தகத்தைக் கிழித்து எறிய வேண்டுமென்றன். நாங்கள் பதில் பேசாத சிலைகளாக இருந்தோம். எங்கள் நிலையைப் பார்த்துவிட்டு. புத்தகத்தைப் பற்றியோ, இல்லை அதை எழுதிய சிக்பிரெட்டைப் பற்றியோ எங்களுக்கு ஏதாவது தெரியுமா என செள கேட்டான். நாங்கள் தெரியாதென்று பல முறை சொன்ன பிறகும் அவன் நம்பவில்லை. தன் இருப்பிடத்தை விட்டு எழுந்து போய் என் அலமாரியில் இருந்த சிக்பிரெட்டின் புத்தகத்தை எடுத்துக் கொண்டு வந்தான். அதை எனக்கு சிக்பிரெட் 1930-ம்வருடத்தில் அன்பளிப்பாக என் பெயரை எழுதித் தந்திருந்தான்.

நிலைமையைச் சமாளிக்க நாங்கள் வெகு பாடுபட்டுப்போனேம். எங்கள் வீட்டில் யூதன் இருப்பது தெரிந்தால் நாங்கள் எல்லோரும் மடிய வேண்டியது தானே?

அறையை விட்டு வெளியே போன செள பூட்டியிருந்த சிக்பிரெட் அறையின் முன் நின்று, "கதவைத் திற...இல்லாவிட்டால் ...சுட்டு விடுவோம்!" என்று கதறிக் கொண்டிருந்தான். அவன்போட்ட சப்தத்தைக் கேட்டுத்தான் நாங்கள் வெளியே வந்தோம்......என்ன விஷயம் என்று நான் கேட்டபோது.

* தொடர்ச்சி 4-ம் பக்கம்

தமிழில் :
"அதிகமான்"

காதலுக்கு ...

5-ம் பக்கத் தொடர்ச்சி

அக்குதிரையேறி பதுங்குமலை செல்ல வேண்டும். நாளை இரவிற்குள் அங்கு போய்ச் சேர்ந்து விடுவோம். அங்கே உன் தந்தையின் அந்நாள் நண்பர்கள் பலர் குழுமி நம்மை வரவேற்பர். அவர்கள், மக்கள் புரட்சிக்கு ஏற்கனவே விதை தூவியிருப்பர். பல பிரபுக்களையும், பெருமக்களையும், பணத்தாலும், எதிர்கால பதவியளிப்பு உறுதியாலும் நம் பக்கம் இழுத்திருக்கிறேன். படை வீரர் பற்றிய பயமில்லை. ஏனெனில் மன்னன் இறந்தான் என்ற செய்தி கிடைத்த மறுகணமே நம் பக்கம் வந்திடுவர்.

ஆள: (உறுதி கலந்த குரலில்) என்னால் இந்தத் திட்டத்தை ஏற்க முடியாது.

ப: என்ன? முடியாதா? இது தவிர வேறு திட்டம் தயாரிக்க முடியாது, தம்பி. அனுபவமிக்க உன் அண்ணனின் ஏற்பாடு—மறுக்காதே—ஒப்புக் கொள். உம்...காரியத்தை முடி, கணத்தில்—போவோம்.

ஆள: அண்ணா, என்னுடைய முடிவை தெளிவாகத் தெரிந்து கொள்ளுங்கள்—நான் மன்னன் புலிவலனைக் கொல்லப் போவதில்லை.

ப: என்ன? இல்லை, இல்லை. என் காதுகள்தான் துரோகிகள்—தம்பி, நீ பேசு—வயது வளர்ந்து, என் புலனறிவு சக்திகளைக் குறைத்துக் கொண்டே வந்து விட்டது. நான் வயதேறிப் போனவன். ஆகவே காதுகள் தெளிவாகக் கேட்கும் சக்தி பெற பெறவில்லை! 'இதோ என் இடையிலே சொருகியிருக்கும் உன் தந்தையின் வாளால், மன்னன் புலிவலனைக் கொன்றிடப் போகிறேன்'—இப்படித்தானே கூறினாய்?

ஆள: இல்லை; நான் மன்னனைக் கொல்லப் போவதில்லையென்று சொன்னேன்.

ப: நீ அப்படிச் சொல்லவில்லை—சொல்லமாட்டாய்—சொல்லக் கூடாது—சொல்லும்படி விடமாட்டேன் — காற்று புயலாகி, உன் வார்த்தைகளை மாற்றி, என் செவிகளில் அப்படி ஒலிக்கும்படிச் செய்து விட்டன போலும்—ஆம், அப்படித்தான் நினைக்கிறேன்!

ஆள: அண்ணா, தங்கள் செவிகள் செம்மையாகவே உள்ளன—காற்றும், என் வார்த்தைகளை மாற்றிவிட வில்லை. நான் மன்னனைக் கொல்லப் போவதில்லை; இது திண்ணம்!

ப: அப்படியானால், பழி வாங்கப்பட்ட உன் தந்தையின் பழி தீர்க்க வழி என்ன தம்பி?

ஆள: இந்தக் கிழ மன்னனின் குருதி, என் இரு கரங்களில் வழிவதைக் கண்டு மறைந்து போன என் தந்தை மகிழ்வார் என்றா கருதுகிறீர்கள்?

ப: மகிழ்வாரா என்றா கேட்கிறாய்? மகிழ்ச்சி மிகுதியில் கூத்தே ஆடுவார்!

ஆள: நான் அப்படி நினைக்கவில்லை, அண்ணா. இறந்தவர்கள், உலகில் நாம் பெற்ற அறிவைவிட சிறந்த அறிவு பெற்றிருப்பர் என்று கருதுகிறேன். மனிதருக்கு மனிதன் பழி வாங்க வேண்டியதில்லை. பழியே, சரியான நேரத்தில் பழி வாங்கிவிடும்!

ப: புதிய வேதாந்தம் பேசுகிறாய், தம்பி.

ஆள: வேதாந்தமல்ல; தெளிந்த சிந்தனை அண்ணா. ஆம், நான் முடிவாகச் சொல்கிறேன், மன்னனைக் கொல்ல மாட்டேன்.

ப: மன்னனைக் கொல்லாத நீ, இந்நேரத்தில் இங்கு வருவானேன்?

ஆள: இதோ என் திட்டம்—கேளுங்கள் அண்ணா! நான் இப்போது மன்னன் உறங்கும் அறைக்குச் செல்லப் போகிறேன். அவன் மார்பின்மீது தந்தையின் வாளையும், இந்தக் கடிதத் துண்டையும் வைக்கப் போகிறேன். அவன் விழித்து எழுந்து, இதனைப் பார்த்து தன்னைப் பழி தீர்க்க ஆள் இருக்கிறான் என்பதையுணர வேண்டும். தினந்தினம் அஞ்சிட வேண்டும்—ஆனால் அவனைக் கொல்லக் கூடாது. இதுதான் உயர்ந்த முறையில் பழிவாங்கியதாக ஆகும் என எண்ணுகிறேன்.

ப: ஐயோ! பரிதாபத்துக் குரிய தந்தை— மன்னர் வெள்ளை மனத்தான் முன்னர்தான் துரோகத்தால் துளைக்கப்பட்டார்! இதோ, மறுமுறையும்—அதுவும் தன் சொந்த மகனாலேயே! ஐயோ, தகாத வார்த்தைகளைப் பேசிப் பொழுதைத் தள்ளாதே—கோழையாகாதே! வீரன் பெற்றெடுத்த வெற்றி வீரனாய்ப் போ—மன்னன் புலிவலன் மாளிகையினுள் போ—ஒளி உமிழும் உன் உடைவாளை அந்தத் துரோகியின் இருதயத்துள் பாய்ச்சு—இரக்கமற்ற அவன் இருதயத்தை, வாள் முனையால் கொத்தியெடுத்துவா—வந்து காட்டிவிட்டுப் பேசு, இந்த கண்ணியம், பெருந்தன்மை, நீதி, தூய்மை எல்லாம்!

ஆள: அண்ணா, தங்களின் இதய ஓரத்தில் வீற்றிருக்கும் பெருந்தன்மையின்மீது ஆணையிட்டுக் கேட்கிறேன். அதன் பக்கத்தில், என் தந்தையிடம் தாங்கள் கொண்ட ஆருத பற்று, அன்பு இவைகள் மீதும் ஆணையிட்டுக் கேட்கிறேன். என் அன்புத் தந்தை—கண்ணியமிக்க கனவான்—வாட் போரில் வல்லமை மிக்க பெருவீரன்—கருணை மிக்க பெருமை மன்னர்—தன் மகனை கள்ளன் போல, நள்ளிரவில், தன்னாத வயதுடைய ஒருவனை, அவன் எவ்வளவோ பொல்லாத குணமுடையவனாக இருந்தாலும் கொல்லுவதையா எதிர்பார்ப்பார்—அண்ணா, நீங்களே சொல்லுங்கள்.

ப: தம்பி, நீ தந்த வாக்குறுதியை மறந்து விட்டாயா? யோசித்துப் பார் — மேலும் ஒரு உண்மையையும் தெரிந்து வைத்துக்கொள். நீ மன்னன் மனைவி பொன்மேனியாளின் மீது மயக்கங் கொண்டுள்ளாய் என்பதை நான் அறிவேன் — அவள் போதையிலே இப்படி மனம் பேதலித்திருக்கிறாய்.

ஆள: அண்ணா, அப்படி அவள் மீது பழி சுமத்தாதே! அவள் வெண்ணொளி வீசும் தண்ணிலவு போன்று தூய்மையானவள்! இதோ, மின்னும் நட்சத்திரங்களைவிட ஒளி மனம் பெற்றவள்.

ப: ஐயோ, இன்னும் இவன் அவள் ஊட்டிய காதல் மயக்கத்தில் கட்டுண்டு கிடக்கிறான்! தெளியவில்லையென்பது தெளிவாகத் தெரிகிறது. கோழை மனம் படைத்த முட்டாளாகி விட்டானே! (அவனைப் பார்த்து) தம்பி, உன் வாழ்விலே காதல் உன் விளையாட்டு பொம்மையாக இருக்க வேண்டும்-நீ அதன் விளையாட்டு பொம்மையாக ஆகிவிடக் கூடாது!

ஆள: அண்ணா, பேச மட்டுமே தங்களால் இப்போது முடியும்—நீங்கள் கிழப் பருவத்தின் தாழ்வாரத்தில் நடை பழகுகிறீர்கள்.

ப: நீ மன்னனைக் கொல்லப் போவதில்லை...?

ஆள: இல்லை!

ப: ஐயோ, புலி, பூனையைப் பெற்ற கதையாகி விட்டதே! வீரனின் கோழை மகன் இவன் என்பது இப்போதல்லவா தெரிகிறது! பெற்ற தந்தையை ஒருவன் விலைகூறி விற்றான் கொலைகாரனிடம்—அந்தப் பாதகன் யாரென்று தெரிந்தும், இவன் பாகவதர் செய்யும் கதாகாலட்சேபம் செய்கிறான்!

ஆள: அண்ணா, நான் கோழையல்ல! மன்னனை, முதல் முதல் பார்த்தேனே, அக்கணமே, அந்த இடத்திலேயே வெட்டி வீழ்த்தியிருப்பேன்-தடுத்தது தாங்கள் அண்ணா—மறக்க வேண்டாம்.

ப: அப்போது காலங் கனியவில்லை என்பதாலே தடுத்தேன்—இதோ, இப்போது தக்க காலம் வந்துவிட்டது—ஆனால், பேடியின் பேச்சல்லவா பேசுகிறாய் நீ!

ஆள: பேடியின் பேச்சல்ல அண்ணா — பெருந்தன்மையான பேச்சு இது—பழி வாங்க வேண்டும்— ஆனால், கண்ணியமான வழியிலே! அதுதான் என் முடிவு. உங்கள் உடலில் இளமைப் பருவத்தின் இன்பத் துடிதுடிப்பு இருக்க நியாயமில்லை. அழகுக் கோவிலின் அற்புத வாயிலை தங்கள் வயதான கண்கள் பார்க்க மறுக்கின்றன. தங்கள் செவிகள், உலகத்திலே பாடும் காதல் கீதத்தைக் கேட்க மறுக்கின்றன. நீங்கள் காதலைப் பற்றிப் பேசுகிறீர்கள் — அந்தக் காதலின் சிங்காரக் கதையை நீங்கள் அறிய மாட்டீர்கள்!

ப: தம்பி, நீ அரும்பு—நானோ மலர்ந்து, இப்போது வதங்கி விழ வேண்டிய மலர். அரும்பு மலருக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த கதையாக இருக்கிறது! என் இளமைக் காலத்துக் கதைகளைப் பற்றி சொல்லவா தம்பி!

● தொடரும் ●

தி. மு. க. தலைமை நிலையச் செய்தி :

தி. மு. கழக

மத்திய செயற்குழுக் கூட்டம்

29--12--56

சனியன்றும்,

பொதுக்குழுக் கூட்டம்

30--12--56

ஞாயிறன்றும்

சேலத்தில்

நடைபெறும்.

அருமை நண்பன்

• ஜெர்மன் மூலம்:
ஹெர்மன் கெஸ்டன்

தமிழில்:
"அதிகமான்"

ஆண்டன் லெளபர் தன் அறையில் அமர்ந்து சிந்தனையில் ஈடுபட்டிருந்தார். மியூனிச் நகரத்தில் அவர் தங்கப்போகும் கடைசி நாள் இதுதான். பிறகு அவர் பெர்லினுக்குப் புறப்பட்டு விட வேண்டும். பிளாம் குடும்பத்தார் தந்த அறையில் அவர் இவ்வளவு நாட்கள் இருந்ததால், அவரது பிரிவுபசாரத்திற்காக நேற்றே அக் குடும்பத்தார் ஒரு விருந்து நடத்தி விட்டார்கள். லெளபரின் திட்டப் பிரகாரம் நேற்றைய தினமே அவரும் புறப்பட்டுப் போயிருக்க வேண்டும். ஆனால் லெளபர் ஒரு நாள் தனது பிரயாணத்தை ஒத்திப் போட்டிருந்தார். பிளாம் குடும்பத்தார் அதனால் வருத்தமோ மகிழ்ச்சியோ அடைந்ததாக வெளியில் காட்டிக் கொள்ளாமல் அவரை மேலும் ஒரு நாள் தங்கள் வீட்டு அறையில் தங்க அனுமதித்தார்கள்.

தனிமையில் இருக்கும்போது மனிதன் ஏதாவது ஒரு பாட்டை முணுமுணுப்பது சகஜம். லெளபர் சாய்வான நாற்காலியில் அமர்ந்து ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருந்தார். கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது. லெளபர் கதவைத் திறந்தார். ஆச்சரியத்தினால் அவரது கண்கள் அகல விரிந்தன. ஏனெனில் பிளாம் குடும்பத்தார் கையில் உணவு வகைகளோடு வெளியில் நின்றிருந்தார்கள்.

"நீங்கள் இங்கிருக்கும்போது எங்களால் தனியாக சாப்பிட முடியவில்லை. அதனால் உங்கள் அறையில் அமர்ந்து எல்லோருமாக உணவருந்தலாம் என்ற முடிவோடு இங்கு வந்திருக்கிறோம். உங்களுக்கொன்றும் ஆட்சேபனை இல்லையே?" என்றார் ஆர்தர் பிளாம். குடும்பத் தலைவர் அவர்.

லெளபர் தனது சம்மதத்தைத் தெரிவித்துவிடவே குடும்பம் உள்ளே நுழைந்தது. ஆர்தரும் அவரது மனைவியும் ஒரு பக்கம் உட்கார்ந்து கொள்ள, அவர்களுடைய மூன்று புதல்விகளும் லெளபரின் இரு பக்கத்திலும் அமர்ந்தார்கள். புதல்விகள் மூவருக்கும் வயது இருபதிலிருந்து—இருபத்தைந்துக்குள்தான் இருக்கும். நல்ல அழகிகள். விருந்து சாப்பிட ஆரம்பித்தவுடன் பேச்சும் ஆரம்பமாகியது.

"உங்கள் பிரிவு எங்களுக்கு அதிக மனக் கஷ்டத்தைக் கொடுக்கிறது லெளபர். உங்களைப் போன்ற நண்பர் எங்களுக்கு இனி கிடைப்பாரா என்பது சந்தேகந்தான்—" என்றார் ஆர்தர்.

அந்தப் புகழ்ச்சியை லெளபரால் தாங்க முடியவில்லை. தலை குனிந்தார். வேண்டுமென்றே தன்னை ஆர்தர் புகழ்கிறாரா என்ற சந்தேகம் அவருக்கு. அதனால் தலை நிமிர்ந்தார். நாற்பத்தேழு வயதான ஆர்தரை என்றுமே அவர் நண்பராக மதித்ததில்லை, இன்று மட்டும் மதிக்க முடியாது!

ஆர்தர் பிளாம் பிரதம மாஜிஸ்திரேட்டாக வேலை பார்த்தவர். ஆனால் யுத்தத்திற்குப் பிறகு அவர் சாதாரண மாஜிஸ்திரேட் பதவிக்கு தள்ளப்பட்டார். அதற்குக் காரணம் 1939-ம் வருடத்தில் ஆர்தர் தேசிய சமதர்மக் கட்சியில் சேர்ந்ததுதான். இப்போது அவர் நாஜி கோர்ட் தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். உயர்ந்த பதவி மீண்டும் கிடைக்கும் என்ற நம்பிக்கை அவருக்கு!

நல்ல உயரம்—நரைத்த தலை—குடிகாரனைப் போன்று சிவந்து காணப்பட்ட கன்னங்கள்—ஒளி பொருந்திய கண்கள். திறமை மிக்க பேச்சு, இதுதான் ஆர்தர்.

லெளபரிடம் எதையோ எதிர்பார்த்து அதற்காக அவரை ஆர்தர் புகழ்ந்தால், தோல்விதான் கிடைக்கும் அவருக்கு!

மதுக் கோப்பைகளை நிறைத்து விட்டு ஆர்தர் பேசலானார்.

"லெளபர் நீங்கள் கண்யமானவர். நீங்கள் என்னைப் பற்றி ஒரு முடிவுக்கு வரக்கூடும். அதனால் தான் இப்போது என் வாழ்வில் நடந்த அந்தரங்கமொன்றை உங்களுக்குச் சொல்லப் போகிறேன். அதன் மூலம் நீங்கள், நான் உண்மையில் குற்றவாளியா — (ஓரளவுக்கு கொலைகாரன்), இல்லையா என்பதை அறிய முடியும். உங்கள் அபிப்பிராயம் நன்றாக இருந்தால், மீண்டும் நீதிபதிப் பதவி எனக்குக் கிடைக்கும் என்ற மனோதைரியம் எனக்கு உண்டாகும். இதுவரை இக்கதையை நான் யாரிடமும் சொன்னதில்லை."

ஆர்தரின் மனைவி குறுக்கிட்டாள்.

"அவ் விஷயங்களைப் பற்றி இப்போது மீண்டும் பேசுவானேன? நடந்து விட்டது!"

"நீ பேசாமலிரு.....லெளபரைப் போன்ற ஒரு நல்ல மனிதரின் அபிப்பிராயம் எனக்கு மிகவும் தேவை" என்று மனைவியை அடக்கி விட்டு அவர் பேச ஆரம்பித்தார்.

லெளபர் வாயைத் திறக்காமல், தட்டைக் காலி செய்யும் வேலையில் ஈடுபட்டிருந்தார்.

"எனக்கு சிக்பிரெட் என்ற ஒரு பள்ளித் தோழன் உண்டு. சில வருடங்களில் அவன் காசல் நகரத்திற்கு, நகராட்சி கலைப் பொருட்காட்சியின் அதிகாரியாகப் போனான். அவனைப் பார்த்தால் ஒரு ஓட்டல் தொழிலாளியைப் போலிருக்கும். ஆனால் விஷய ஞானமுள்ளவன்—பதினாறும் நூற்றுண்டில் வாழ்ந்த ஒரு சித்திரக்காரனைப் பற்றி அவன் ஒரு புத்தகம் கூட எழுதியிருந்தான்.

1939-ம் வருடத்தின் ஜனவரி மாதத்தில் ஒரு நாள் மாலை. சிக்பிரெட் என்னைத் தேடிக் கொண்டு என் வீட்டுக்கு வந்தான். பாரிஸில் இருந்த ஜெர்மன் காரியாலயத்தைச் சேர்ந்த வாம்ராத் என்பவனை யாரோ ஒரு யூதன் கொன்று விட்டானும், அதனால் சிக்பிரெட்டை கைது செய்து விட்டார்கள். காரணம் என் நண்பனும் ஒரு யூதன். அவனை சித்திரவதை செய்தபின், ஜெர்மனியை விட்டுப் போய்விடுவதாக வாக்குப் பெற்றுக்கொண்டு அவனை அதிகாரிகள் விடுதலை செய்திருக்கிறார்கள். அவன் மனைவியாக இருந்தவள், அவன் பால் இரக்கம் கொண்டு தன் புதிய கணவனிடம் சொல்லி ஒரு 'பாஸ்போர்ட்' கூட தயார் செய்து கொடுத்து விட்டாள். ஆனால் சிக்பிரெட்டுக்கு ஜெர்மனியை விட்டுப் போக இஷ்டமில்லை. காரணம் என்னவென்றால் அவன் மூதாதையர்களெல்லாம் ஜெர்மனியில் பிறந்து, இறந்தவர்கள். ஹாம்பர்க்கில் கப்பல் ஏறுவதற்குப் பதிலாக, சிக்பிரெட் நேராக மியூனிச்சுக்கு, என்னிடம் வந்து விட்டான்.

"உன்னை நம்பிவந்து விட்டேன். எனக்கு ஏதாவது வழி செய்!" என்றான், அவன். நான் சர்க்கார் ஊழியன். மேலும் எந்தக் கட்சியிலும் இல்லாதவன். அவனுக்கு என்ன உதவி செய்யக் கூடும் என்றே எனக்குத் தெரியவில்லை அதனால் இருவரும் என் மனைவி பெல்லாவிடம் யோசனை கேட்டோம்.

சிக்பிரெட் உண்மையில் கொலைகாரனல்லவென்பதை நிச்சயம் செய்து கொண்டபின்தான், பெல்லா சிக்பிரெட்டை எங்கள் வீட்டில் அன்றிரவு தங்க அனுமதித்தாள். நான் அவளுக்கு நிலைமையை எடுத்துச் சொன்னேன். ஆனால் அவள் சிக்பிரெட் குற்றவாளியல்ல.........அதனால் அவன் இங்கு இரவைக் கழிக்கலாம் என்று தீர்மானமாகச் சொல்லி விட்டாள். சிக்பிரெட் எனது மூத்த மகள் மரியத்தின் அறையில் படுத்துக் கொண்டான். என் மகளோ ஒரு சோபாவில் சுருண்டாள்.

1939-ம்வருடத்தில், மியூனிச் நகரத்தில் ஒரு யூதனுக்கு கிறிஸ்தவர் இல்லத்தில் தங்க இடம் கிடைத்தென்றால் அதற்கு எவ்வளவு தைரியம் இருந்திருக்க வேண்டும்?

மறு நாள் சிக்பிரெட் போய் விடுவதாகத்தான் சொன்னான். ஆனால் பத்திரிகையில் வந்திருந்த செய்திகளைப் படித்தபின், அவன் வீட்டை விட்டு வெளியேறினால் உயிரோடு இருக்க மாட்டான் என்பதை அறிந்த என் மனைவி, அவனை வெளியே அனுமதிக்க வில்லை. எனக்கும் அவளுக்கும் இந்த விஷயமாக சண்டைகூட நடந்தது ஆனால் ஜெயித்தது அவள்தான். சிக்பிரெட்டால் கூட அவளை எதிர்க்க முடியவில்லை. கடைசியில் அங்கே தங்கினான். அவனுக்கென்று தனியாக ஒரு அறை ஒதுக்கப்பட்டது, அவன் எங்கள் வீட்டில் இருப்பதே வெளியில் யாருக்கும் தெரியாத வகையில் எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன: இவ்வளவு செய்தும் சிக்பிரெட் வெளியில் போய் விடவே விரும்பினான். அவனால் எங்கள் குடும்பத்திற்குத் தீமை ஏதும் வந்து விடக்கூடாது என்ற எண்ணத்தில்! அறையில் அடைபட்டுக் கிடந்தவன் பேசாமல் இருக்காமல் குருன்வால்டு என்ற ஓவியனைப் பற்றி ஒரு புத்தகம் எழுதி என் பெண்களுக்கு வாசித்துக் காட்டினான். ஆனால் அதை எங்கள் வீட்டில் வைத்துக் கொள்ள பயந்து நாங்கள் எரித்து விட்டோம்!

முதலில் அன்னியன் ஒருவன் எங்கள் வீட்டிலிருப்பது எல்லோருக்கும் சங்கடமாகத்தான் இருந்தது. ஆனால் நாளடைவில் எல்லாம் பழக்கப்பட்டுப் போய் விட்டது. அடுத்த மாதத்தில் சிக்பிரெட் என்னைத் தூண்டாமலே, நான் தேசிய சமதர்மக் கட்சியில் அங்கத்தினனாகி விட்டேன். கட்சி அங்கத்தினன் என்றால் என்னை யாரும் சந்தேகிக்க மாட்டார்கள். சிக்பிரெட்டுக்கு ஆபத்தும்குறைவு இதில் சுயநலமும் கொஞ்சம் இருந்தது நான் குடும்பத்தின் தலைவன் அல்லவா?

யுத்தம் ஆரம்பமாகி விட்டது, எங்களுக்கும் தொந்தரவு அதிகமாகிவிட்டது. சிக்பிரெட்டை ஒவ்வொரு தடவையும் எங்காவது ஒளித்து வைத்து, மற்றவர் கண்களிலிருந்து அவனைக் காப்பாற்றுவாள் என் மனைவி. இந்தத் தொந்தரவுக்கெல்லாம் காரணமான அவனை, "நீ ஏன் சுவிட்ஜர்லாந்துக்கு ஓடி விடக் கூடாது" என்று நான் கேட்டேன்.

"உனக்கு ஏன் தொந்தரவு, கொஞ்சம் விஷம் கொடுத்து விடேன்!" என்றான் அவன். எனக்குக் கோபம் வந்தது. அவனுடன் சண்டையிட்டேன். ஹிட்லர் பாரிஸ் நகருக்குள் புகுந்த தினத்தன்று எங்களுக்குள் கைகலப்பு நடக்கவிருந்தது. நல்லவேளை! இருவரும் அழுதே சமாளித்து விட்டோம்!!

என் பெண்கள் வயது வந்தவர்களல்லவா? அவர்களுடைய நண்பர்கள் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவார்கள். அதில் ஸ்ட்ராசென என்ற வாலிபன் ஒருவன். கடைசி மகளைக் காதலித்த அவன், முடிவாக என் மூத்த மகள் மரியத்திடம்தான் காதலைப் பெற முடிந்தது. ஸ்ட்ராசென அடிக்கடி வீட்டுக்கு வந்து பேசிக் கொண்டிருப்பான். ஒரு நாள் பதினாறும் நூற்றாண்டு ஓவியனைப் பற்றிப் பேச்சு வந்தது. பேச்சு வாக்கில் அவன், சிக்பிரெட் எழுதிய அந்த ஓவியனைப் பற்றிய புத்தகத்தைக் கிழித்து எறிய வேண்டுமென்றான். நாங்கள் பதில் பேசாத சிலைகளாக இருந்தோம். எங்கள் நிலையைப் பார்த்துவிட்டு, புத்தகத்தைப் பற்றியோ, இல்லை அதை எழுதிய சிக்பிரெட்டைப் பற்றியோ எங்களுக்கு ஏதாவது தெரியுமா என சென கேட்டான். நாங்கள் தெரியாதென்று பல முறை சொன்ன பிறகும் அவன் நம்பவில்லை. தன் இருப்பிடத்தை விட்டு எழுந்து போய் என் அலமாரியில் இருந்த சிக்பிரெட்டின் புத்தகத்தை எடுத்துக் கொண்டு வந்தான். அதை எனக்கு சிக்பிரெட் 1930-ம்வருடத்தில் அன்பளிப்பாக என் பெயரை எழுதித் தந்திருந்தான்.

நிலைமையைச் சமாளிக்க நாங்கள் வெகு பாடுபட்டுப்போனோம். எங்கள் வீட்டில் யூதன் இருப்பது தெரிந்தால் நாங்கள் எல்லோரும் மடிய வேண்டியது தானே?

அறையை விட்டு வெளியே போன சென பூட்டியிருந்த சிக்பிரெட் அறையின் முன் நின்று, "கதவைத் திற...இல்லாவிட்டால் ...சுட்டு விடுவோம்!" என்று கதறிக் கொண்டிருந்தான். அவன்போட்ட சப்தத்தைக் கேட்டுத்தான் நாங்கள் வெளியே வந்தோம்......என்ன விஷயம் என்று நான் கேட்டபோது.

❊ தொடர்ச்சி 4-ம் பக்கம்

சாக்கடை அல்ல; சந்தனக் கடை!

✻ 8-ம் பக்கத் தொடர்ச்சி

திருக்கும் இந்தத் திருவாளர்கள்!

ஆனால் அப்போதெல்லாம் சினிமா திருந்த வேண்டும் என்று கூறவில்லை இவர்கள்! ஒழிய வேண்டும் என்று ஊளையிட்டார்கள்!

திருத்தல்
அழித்தல்

—எவ்வளவு பேதமிருக்கிறது, இந்த இரு வார்த்தைகளிலே!

பதவிக்கு வந்த கடந்த ஒன்பதாண்டுகளாகச் செய்து வந்ததைப் போலவே படக்கலையையும் அழித்துவிடக் கங்கணம் கட்டி நின்றனர்!

தென்னகத்தின் தேசியத் தோழர்களும்; குறிப்பாக ஆச்சாரியாரும் அவர் தம் சீடராம் சுப்ரமணியமுமோ தூங்கும் போதும் அதே நினைவாகவே இருந்தனர்.

காரணம் அறிவியக்கத்தவர் அதில் அதிகம் ஈடுபட்டிருந்ததால்தான்!

எதிர்க் கட்சிக்காரர்கள் அறிவுப் பிரச்சாரம் புரிய படக்கலையை ஒரு கருவியாகத் தேர்ந்தெடுத்தவுடன் அந்தப் படக்கலை மீதே படையெடுத்து விட்டார்கள், அந்தப் பண்பு கெட்டவர்கள்!

ஆனால் இந்த அவசரக்காரர்களெல்லாம் அறிவுடைமைச் சிறிதுமில்லாதத் தங்களது 'பிதற்றலை' நினைத்து வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலைமை உருவாகியிருக்கிறது, இப்போது!

ஆமாம்; பம்பாய் காங்கிரஸ் கமிட்டித் தலைவராம் பட்டீல் சினிமா ஒழிய வேண்டுமென்று ஊளையிட்டச் சிறமதியாளர்களுக்குச் சூடு கொடுத்திருக்கிறார்!

ஆம்; மடமையிருட்டு மண்டிக் கிடந்த தேசியக் கூடாரத்திலே இப்போது பகுத்தறிவுப் பரிதி உதயமாகியிருக்கிறான்!

அதனால் உண்மை உணர்ந்த பட்டீல்,

'எண்பது சதவீதத்தினர் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருக்கும் இந்தியாவைப் போன்ற நாட்டில் மக்களுக்கு எதையும் தெரியப் படுத்துவதற்குத் திரைப் படம் போன்ற சிறந்த சாதனம் வேறு எதுவும் இல்லை."

—என்று பகுத்தறிவுவாதியைப்போல் பேசியிருக்கிறார்!

அது மட்டுமா?

பிரபல தேர்தல் தந்திரக்காரர் என்று கருதப்படும் பட்டீலைப்பார்த்துப் பண்டித நேரு, இந்தத் தேர்தலுக்கு நீர் புதிதாக என்ன செய்யப் போகிறீர்?"—என்று கேட்டாராம்.

அதற்கு; ஆந்திராவிலே கம்யூனிஸ்ட்டுகளுக்குக் கல்லறை அமைத்தவர் என்று அவர்களால் கருதப்படுகிற பட்டீல்; "நான் இந்தத் தேர்தலுக்கு சினிமாவை ஒரு பிரச்சார சாதனமாகப் பயன் படுத்தப் போகிறேன்!"—என்று கூறினாராம்!

அது சாக்கடை! அதனால் பட்டணத்தின் சுகாதாரம் கெடுகிறது! அதை உடனே ஒழித்துக்கட்ட வேண்டும்—என்று கூறினார்கள் முன்பு சினிமாவைப் பார்த்து! ஆனால் இப்போதோ; "இது வன்றோ நறுமணம்! பன்னீரோடையும் புனுகுத் தேக்கமும் இதற்கு நிகராகுமோ?"—என்று கூறிவிட்டு; அந்தச் சாக்கடைச் சகதியிலே எருமை போல விழுந்து புரளுகிறார்கள்.

உண்மைதான்! சினிமா ஒழிக என்று கூக்குரலிட்டுவிட்டு; இப்போது சினிமாவை தேர்தல் பிரச்சாரத்துக்குப் பயன் படுத்தப் போகிறோம்!—என்று பழமையை மறந்துவிட்டுக் கூறுகிறவர்களை ஒப்பிட நாம் இதைவிட வேறென்ன உவமையைக் கூற முடியும்?

மாஜி கவர்னர் ஜெனரல் மூலமும்; அவரது தொண்டரடிப் பொடி ஆழ்வார்கள் மூலமும் முன்பு அவர்கள் தெருவுக்குத் தெரு நின்று கூறியது உண்மையானால் சினிமா அன்றும் இன்றும் தூர்க்கப்பட வேண்டிய சாக்கடையாகத் தானே இருக்க வேண்டும்!

அல்லது அதே நேரத்தில் பம்பாய் பட்டீல் திரைப் படத்தின் வெள்ளி விழா வைபவத்தின் போது 'நாங்கள் தேர்தலுக்குச் சினிமாவைப் பயன் படுத்தப் போகிறோம்!'—என்று கூறுவது உண்மையாயிருந்தால் சினிமாவைச் சாக்கடையோடு ஒப்பிட்டு அது ஒழிய வேண்டுமென்று ஒப்பாரி வைத்த இவர்கள் அந்தச் சாக்கடையில் விழுந்து புரளும் எருமையினும் கேடுகெட்டவர்களாகத்தான் இருக்க வேண்டும்.

தேசியத் தோழனே; தேசியத் தோழனே! இரண்டில் நீ எதை ஒப்புகிறாய்? சினிமா ஒரு சாக்கடை என்பதையா? அல்லது அந்தச் சாக்கடைச் சினிமாவைத் தேர்தலுக்கு உபயோகிக்கப் போகும் 'உங்கள் தேசியக் கூடாரத்தவர்கள் எருமைகளென்'பதையா?

பதில் சொல்வாய், தோழனே; பதில் சொல்வாய்! இல்லையேல் உங்கள் தலைவர்கள் இப்போதுதான் குருட்டறிவு துறந்து புத்தறிவு பெற்றிருக்கிறார்கள் என்பதையாவது ஒப்புக்கொள்! ✻

பிறைவானம்....

✻ 11-ம் பக்கத் தொடர்ச்சி

என்ற கூச்சல் எழும்பியது; நான் அசைந்தேன்; நகர்ந்தேன்! பிரமுகரின் சிறுவன் 'ஓகோ' என்று சிரித்தான். என்னவோ, அவனால்தான் நான் நகருகிறேன் என்ற நினைப்பு அவனுக்கு! 'சொடேர்; சொடேர்!' என்று ஒலிக்கும் 'ஆண்டை'களின் சாட்டையொலிக்குப் பயந்துகொண்டு ஆயிரக் கணக்கான ஏழைத் தோழர்களின் மிருக உழைப்பு என்னை வலம் வர வைக்கிறது என்ற உண்மை அவனுக்குத் தெரியாதுதான்!

கீழ வீதி முனைக்கு நான் வந்தேன். மெதுவாக தெற்கு வீதிக்குத் திரும்பினேன். அந்த வீதியில் நான் கொஞ்சம் வேகமாகப் போவேன். அந்தத் தெருவில்தான் "ஏரோட்டும் மக்கள் எல்லாம் ஏங்கித் தவிக்கையிலே தேரோட்டம் ஏன் உனக்கு தெய்வமே?" என்று கேட்கும் 'நாஸ்திகர்'கள் அதிகமாம்; அவர்களின் சங்கம் இருக்கிறதாம்; கொடி வேறு பறக்கிறதாம்! ஆகவே அதை சகிக்காமல் கடவுள் வேகமாகப் போகிறார் என்று சிலர் கேலிக்குச் சொல்வார்கள்; காரணம் அதுவல்ல — அந்த வீதி முனை சற்று சரிவானது!

முனை திரும்பி நகர்ந்தேன். பிரமுகரின் பையன் என் அடியில்தான் வந்து கொண்டிருந்தான்.

சிறிது தூரம் சென்றேன்; நில்லாமல் சென்றேன். நான் நிற்காமல் நகருவது பெரிய அதிசயம்' எல்லோரும் என் ஓட்டத்திலேயே லயித்துக் கிடந்தனர். அப்போது......? அந்தக் கொடுமையை என்னவென்று சொல்வேன்! பிரமுகரின் மகன் என் வேகத்தோடு ஒத்துவர முடியாமல் சற்று பின் தங்கி சக்கரத்தின் அருகில் நடந்து கொண்டிருந்தான். 'சடக்'கென்று அதைப் பார்த்த பிரமுகர் "நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!!" என்று கத்தினர். வேகத்தை நிறுத்த 'முட்டுக்கட்டை' கொடுத்தார்கள்! ஆனாலும் என்ன பலன்? எனது பிரமாண்டமான சக்கரங்களில் ஒன்று...ஐயகோ... அந்த பகவான் அருளிய பாலகனின் பச்சை ரத்தத்தை ருசி பார்த்து விட்டுத்தான் நின்றது!

அவர் 'வேதனையின் எல்லை இதுதான்' என்று சொல்லத் தக்க அளவுக்கு புலம்பிப் புரண்டார்!

"ஆண்டவன் தந்தான்; அவனே எடுத்துக் கொண்டான்!" என்று வேதாந்தம் சொன்னார் கோயில் குருக்கள்!

"அவ்வளவு சொத்தும் வாரிசில்லாமல் போகப் போவுது!" என்று வருந்தினான் ஒரு பொறாமைக்காரன்!

"தங்கத் தம்பியாயிற்றே, அநியாயமாகக் கொன்று விட்டார்களே அக்கிரமக்காரர்கள்" என்று கண்ணீர் விட்டார் ஒரு 'மழலைப் பிரியர்!'

யார் என்ன சொல்லி என்ன; என் ஓட்டம் அந்த ஆண்டுடன் முடிந்துவிட்டது! அது முதல் சிறையிலேயே கிடக்கிறேன்! வேதனை தாள முடியவில்லை! என்ன செய்வது? என் கதை கேட்டு உங்களுக்குக்கூட இரக்கம் உண்டாகவில்லையா? எனக்கு உதவ முடியுமா உங்களால்? என்ன யோசிக்கிறீர்கள்? உங்களால் முடியும் ஒரு உதவி...சிறு உதவி...மிக மிகச் சிறிய உதவி ... செய்வீர்களா? எனக்கு விடுதலைதர வேண்டாம்! என்னைக் கொன்று விடுங்கள்! ஆமாம்; என்னை அழித்து விடுங்கள்! உடைத்து விறகாக்கி பயன் படுத்திக் கொள்ளுங்கள்; அல்லது தீ வைத்து தீர்த்து விடுங்கள்! செய்வீர்களா? உங்களுக்கு சிறிய வேலை—ஆனால் எனக்குப் பேருதவி!

"சொர்ணம்"

பொங்கல் மலர்

தனிப்பிரதி வேண்டுவோர் கவனிக்க.

பொங்கல் மலர் தனிப் பிரதி தேவைப்படும் தோழர்கள் ரூ 2—12—0 அனுப்பி இப்போதே பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம். சாதாரண தபால் மூலம் அனுப்புவதால், நிச்சயம் மலர் கிடைக்கும் என்ற உறுதிகர இயலாதாகையால், பதிவுத் தபால் மூலம் மட்டுமே அனுப்பப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

—நிர்வாகி.

'புதுமைக் குரல்'

(திங்கள் இதழ்)

ஆமதாபாத், பம்பாய், ஆலைத் தொழிலாளர்களின் செய்திகளை அறிவிக்கப் புறப்பட்டுவிட்டது.

பொங்கற் புதுநாளன்று மலர் வெளிவருகிறது.

டாக்டர் மு. வரதராசனார், மற்றும் தமிழகப் புலவர் பெருமக்கள் அளித்திடும் இலக்கியச் செல்வங்கள்.

64 பக்கங்கள் : விலை 0—4—0

மற்றும் விபரம் அறிய எழுதுக

'புதுமைக் குரல்'
144—839 பாப்புநகர்,
ஆமதாபாத்—10.

"முரசொலி"

இலங்கை,
உள் நாடு

ஆண்டு சந்தா 6—0—0
6—மாத சந்தா 3—8—0

'வேண்டுதலை'

இறந்துபோன மன்னர்கள்—சரிந்துபோன நாட்டின் சின்னங்கள்—இவைகள் எல்லாம் கூட காட்சிப் பொருள்களாக இருக்கின்றனவே கண் காட்சி சாலைகளில்...எனக்கு அந்த 'பாக்கியம்' கூடவா இல்லை...?

எங்கே பார்க்கிறீர்கள்? யார் பேசுவது என்று புரியவில்லையா?.. இதோ, நான்தான்... சிறைக்குள்ளிருந்து பேசுகிறேன். இல்லை; கதறுகிறேன்; வேதனை தாங்க முடியாது வெம்பிப் புலம்புகிறேன்!

சிறையா? அது எங்கே இங்கிருக்கிறது? — என்று தேடாதீர்கள். நான் இருக்கும் சிறைகள் சுவற்றால் ஆனதில்லை; அதில் கம்பிக் கதவும் இல்லை! நன்றாகப் பாருங்கள்; அகண்டு நீண்டிருக்கும் கீழ வீதியின் நடுவில், பெரிய பெரிய தகரங்களால் அடிக்கப்பட்ட கூண்டு ஒன்று தெரிகிறதே......கண்டுபிடித்து விட்டீர்களா? அது தான் என் 'சிறை'!

நான் உலகைப் பார்த்தே பத்து வருடங்களாகிவிட்டன! வெயில்–மழை–பனி–எதுவும் என்னைத் தீண்டவில்லை! சமீபத்தில் தஞ்சை மாவட்டத்திலே அடித்ததே புயல்—அதன் கோரத்தைக் கூடப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை நான்! என் அருகிலேயே அனுதினமும் நடமாடும் மனிதர்களைக்கூட நான் பார்க்க முடியவில்லையே! ஆனால், அவர்களின் குரலை மட்டும் சில சமயங்களில் கேட்க முடிகிறது. என் சிறை இருக்கிறதே — அதுதான் தகரக் கூண்டு—அதில் ஒட்டியிருக்கும் சினிமா விளம்பரங்களை சிலர் வாய்விட்டு உரக்கப் படிப்பார்கள்; அந்த சப்தம் மட்டும் என் காதுகளில் விழும் ஆனால் நான் புலம்புவதை யாராலும் கேட்க முடிவதில்லையே!

இன்னும் புரியவில்லையா நான் யாரென்று! சொன்னால் வியப்படைவீர்கள்; 'நானா' பேசுகிறேன் என்று' கல் பேசியதாக நம்புகிறார்களே—அதைப் பாலும் தேனும் ஊற்றி குளிப்பாட்டுகிறார்களே — நாட்டின் போக்கு இப்படி இருக்கும்போது, நான்—நானாகிய 'மரம்' பேசுவதை மட்டும் ஏன் நம்பக்கூடாது?

ஆமாம்; நான் மரம்தான்; அழகாக செய்யப்பட்ட திருப்பாலூர் பெரிய தேர்தான் நான்!

எனக்கு என்ன வேதனை வந்தது என்று கேட்கிறீர்களா?

நன்கு பராமரிக்கப்பட்ட ஒருவன் மற்றவர்களால் பாராமுகமாக நடத்தப்படும்போது எத்தனை துன்புறுவான்? நானும் அந்த நிலையில்தான் இருக்கிறேன்!

நான் வாழ்ந்த வாழ்வென்ன; சிறப்பென்ன; சீரென்ன? இன்று என் சிந்துவாரற்ற கீழ் நிலைதான் என்ன? புதுக்கீற்றால் [illegible]றை போட்டு—பல வண்ண [illegible]லை மாட்டி—தாவும் பொம்மைக் குதிரைகள் கட்டி—அப்பப்பா! எனக்குத்தான் எவ்வளவு அழகு செய்வார்கள்? கடவுள் எழுந்தருள வேண்டிய இடமல்லவா? பகவான் காட்சி தர, என்னை நான்கு வீதி வழியே இழுத்துச் செல்வார்களே, அவர்களின் எண்ணிக்கை எத்தனை தெரியுமா? பத்தாயிரம் பேர்கள்! ஆமாம்; இருபதினாயிரம் கைகள் என்னைக் கட்டியிருக்கும் 'வட'ங்களைப் பிடித்து இழுக்கும் உச்சி வெய்யலில் ஒரே ஒரு ரூபாய் கூலிக்காக அந்தப் பாட்டாளித் தோழர்கள் சிந்தும் வியர்வை வெள்ளத்திலே படகு போல் நான் செல்வேன்; பகவானைச் சுமந்துகொண்டு! விழிகளிலே பக்தியைத் தேக்கி வீட்டோரங்களில்—சாலை நெடுகிலும் மக்கள் நின்று பார்ப்பார்கள்; பரவசப்படுவார்கள்! நான் பூரிப்பேன்; புளகாங்கிதமடைவேன்!

ஆனால்....ஐயோ!......அன்று பெருமைக்குரிய பொருளாகத் திகழ்ந்த நான்தான் இன்று மூலையிலே கிடக்கிறேன்........! வேண்டும்; எனக்கு நன்றாக வேண்டும்!.........நான் செய்த தவறு சாதாரணமானதா? சகித்துக்கொள்ளக் கூடியதா?

புதிர் போல் இருக்கிறதா உங்களுக்கு? அந்த சிக்கல் விடுபட — என் சீரழிந்த கதை விளங்க — இப்போது நான் ஒரு பிரமுகரை உங்களுக்கு அறிமுகப் படுத்த வேண்டும்! ஆனால் அவர் இப்போது திருபபாலூரில் இல்லை; எங்கிருக்கிறார் என்று எனக்குத் தெரியாது; ஏன்—ஒருவருக்குமே தெரியாது என்றுதான் கருதுகிறேன். ஆமாம்; அவர் மனம் கலங்கி—புத்தி பேதலித்து எங்கேயோ ஓடித்தான் போய் விட்டார், பாவம்!

நான் அவருக்கு துரோகம் இழைத்தேன்! ஆனால், அவரோ ஆண்டவன் தனக்கு துரோகம் இழைத்து விட்டார் என்று நினைத்தாராம் முதலில்! பிறகு "கடவுள் கல்தான்; அங்கே கருணைக்கு ஏது இடம்?" என்று புலம்பினாராம்; திரிந்தாராம்; மறைந்தே போனாராம்!

அவர் ஊருக்கு பிரமுகர், கோவிலுக்குக் காவலர்; கடவுளுக்கு பிரதான பக்தர்; ஆனால் ஒரு குழந்தைக்கு அப்பாவாக இருக்க முடியவில்லையே என்ற ஏக்கம் நெடு நாட்களாக அவருக்கு இருந்து வந்தது! அதற்கென்று அவர் எவ்வளவோ பூஜை செய்தார்; 'புண்ணியம்' தேடினார்! கடைசியில் எங்கள் ஊர் தெய்வத்திடம் 'வேண்டுதலை'யும் செய்துகொண்டார்—தனக்கு மகன் பிறந்தால், அல்லது மகள் பிறந்தால், கடவுளின் தேரைப் பிடித்து இழுக்கச் செய்வதாக! ஊர் முழுதும் இதே பேச்சாக இருந்தது—சில காலம் வரை!

கடைசியில் ஆண்டவன் அருள் பாலித்தாரோ, என்னவோ நான் அறியேன்—அவருக்கு ஆண்குழந்தை ஒன்று பிறந்தது.

அவர் ஆனந்தக் கூத்தாடினார். பகவான் அளித்தப் பாலகனல்லவா, பகவானின் பெயரையே அவனுக்கு வைத்தார். 'எம்பெருமானின் கருணையே கருணை!' என்று களித்தார். குழந்தையை தினம் தினம் கோவிலுக்குத் தூக்கிவந்தார். திருவிழா காலங்களில் ஆண்டவன் என்னிடம் தேரில் குடி இருப்பார். அப்போது என்மேலும் குழந்தையுடன் நடப்பார். சுற்றிச் சுற்றி வருவார்!

சீமான் வீட்டுச் செல்வனல்லவா, செழிப்புக்குக் கேட்பானேன்! அழகாக வளர்ந்து கொண்டு வந்தான் அவன்.

"அப்பா! இத்தினி உயரத்துலேருந்து பாக்கிறது எத்தினி அழகாருக்கு!..........'—என்று மழலை உதிர்த்தான் ஒரு முறை என்மேல் நின்று கொண்டு!

"ஆமாண்டா கண்ணு! எல்லாம் வல்ல கடவுளல்லவா! நீ பெரிய பிள்ளையானதும் இதைவிட இன்னும் உயரமா தேர் செஞ்சுத் தர்ரியா, கடவுளுக்கு?"—என்றார் அப்பா.

"மாட்டேம்ப்பா!" என்றான் அவன்.

"அப்படிச் சொல்லப்படாதுடா கண்ணு!..."—என்றார் அப்பா!

"இதைவிட உயரமா ஏம்ப்பா கட்டணும்? ரொம்ப ரொம்ப உயரத்துலே குருவி மாதிரி பறக்குதே 'ஏரோப்ளேன்'—அதிலேயே கடவுளை வச்சு ஊர் சுத்திடலாமேப்பா! அதான் சொன்னேன்!" என்றான் அந்தக் குறும்புக்காரன்!

அவன் சுட்டித்தனம் என்னை வியக்க வைத்தது! ஆனால்...... ஐயோ...இப்போது நினைத்தாலும் என்னால் தாங்க முடியவில்லையே! அந்த சம்பவத்தை எப்படி நான் சொல்வேன்?

அந்த வருடம் பையனுக்கு ஐந்து வயது பூர்த்தியாகி விட்டது' 'வேண்டுதலை'யை நிறைவேற்றிவிட முடிவு செய்தார் பிரமுகர். ஆகவே அந்த ஆண்டு திருவிழாவே தனிச் சிறப்புடன் துவங்கியது! அனைத்தையும் விட எனக்குத்தான் ஏக மகிழ்ச்சி! தஞ்சாவூரிலிருந்து பிரதேயக நிபுணர்களை அழைத்து வந்தார் என்னை அலங்கரிக்க! எனக்கு அணிவித்த சீலைகள் எல்லாம் உயர்ந்த ரகத்தவை. எனக்கு மட்டும் ஆயிரக் கணக்கான ரூபாய்கள் செலவழித்தார். ஏன் தெரியுமா? என்னைப்பிடித்துத்தானே அவர் மகன் இழுக்க வேண்டும்!

அன்று!...நான் ஓடும் நாள்! 'தேரோட்டம்' என்று தான் சொல்வார்கள் பைத்தியக்காரர்கள் — ஆனால் நான் என்ன ஓடவா செய்கிறேன்! ஆமையின் வேகத்தைவிட மிக மிக மெதுவாகத்தானே நான் ஊர்வேன்!

நான் 'முட்டி'யைவிட்டு—அதாவது என் இருப்பிடத்தை விட்டுப் புறப்பட்டேன். அப்பப்பா! என்ன கூட்டம்! வீதி முழுதும் தலைகள்! என்னை இழுக்கும் பத்தாயிரம் பேர்—விழா காண வந்த எண்ணற்ற ஆயிரம் பேர்! எனக்கு ஒரே களிப்பாக இருந்தது! இதனால் மட்டுமல்ல நான் பூரித்தது—அந்தப் பிரமுகரின் ஐந்து வயதுப் பாலகன் என் கீழ் நின்று கொண்டு 'வட'த்திலே கையை வைத்துக்கொண்டிருந்தான்.

தாரை ஒலித்தது; தம்பட்டம் முழங்கியது; "ஓகையா"

❋ 10-ம் பக்கம் பார்க்க

கடைசிப் பக்கம்

எழுத்தாணி

வே. உலகநாதன்; சென்னை.

(?) செத்துப்போனவர்கள் மகிழ்ச்சி யடைவார்களா?

அப்படியிருந்தால் அம்பேத்கார் மறைவு குறித்து இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு ஆவிதுறந்த மனு தான் பெருமகிழ்ச்சி அடைந்திருப்பான், இப்போது புத்தனுக்கு அடுத்தபடி சொல்லத் தக்க பகைவன் மறைந்தானென்று!

கா. செல்லபாண்டியன்;

(?) தேர்தல் பிரசாரத்துக்கு ஏன் இப்போதே நேருவை அழைத்திருக்கிறார் காமராசர்?

கனியைப் பறிக்கக் கையாலாகாதவர்கள் ஏணியைத்தானே உபயோகிக்கவேண்டும்!

இராமநாதன்; அருப்புக்கோட்டை.

(?) இந்தத் தேர்தலில் ம. பொ. சி. போன்ற சொற்பொழிவாளர்கள் காங்கிரசின் பக்கம் இல்லாமற்போய்விட்டார்களே; அதற்குக் காமராசர் என்ன செய்வார்?

இன்னும் இரண்டு உறவினர்களுக்கு உத்தியோகம் கொடுத்து குருசாமி போன்றோரை விலைக்கு வாங்குவார்!

சாமிநாதன்; அவசாவெள்ள-

(?) கவர்னர் ஜான் எப்படி இருக்கிறார்?

சென்னைக்கு வந்த முதல்நாளே ரஷ்ய சர்க்கஸ் சென்று, சர்க்கஸ் அழகிகளுடன் புகைப் படம் எடுத்துக்கொண்டார்; பதவி ஏற்பதற்கு முன்பு ஆச்சாரியாரின் கரங்களை எடுத்து கண்களில் ஒத்திக் கொண்டார் போதுமா அவர் 'பிரதாபம்'?

கருப்பண்ணசாமி; சிங்கநல்லூர்.

(?) ஓய், எழுத்தாணியாரே! நேரு வருகிறாராமே!

வந்ாலென்ன; சென்ற தடவையும் நேரு வந்துதானே குமாரசாமி ராஜா தோற்றார்!

கிளைக் கழக நிர்வாகிகளின் கவனத்திற்கு!

பொதுச் செயலாளரின் அறிக்கைப்படி, தேர்தல் வாரத்தில் திரட்டிய தொகையைப் பொதுக் கூட்டம் நடத்தி அதன் மூலம் அளிப்பதென்று சில கிளைகள் எண்ணியிருப்பதாகத் தெரியவருகிறது. இத்தொகையைப் பொதுக் கூட்டங்களுக்கோ, வேறு எந்த நிகழ்ச்சிகளுக்கோ பயன்படுத்தாமல், உடனே முழுத் தொகையையும் தலைமை நிலையத்திற்கு அனுப்பி வைக்குமாறு எல்லா கிளைக் கழக நிர்வாகிகளையும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம். மாவட்ட நிர்வாகிகளும் இதனைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

இணையற்ற நாடகம்

ஒப்பற்ற நூல் வடிவில்



விலை

ரூபாய் 1—8—0

முத்துவேல் பதிப்பகம்
77, மதுரை ரோடு,
— திருச்சி. —

புத்தாண்டு விருந்து!

முரசொலி பொங்கல் மலர்!

இது ஒரு அரசியல் சுவடி!

இது ஒரு இலக்கியப் பேழை!

இது ஒரு கலைப் பெட்டகம்!

என்று தமிழகம் போற்றிப் புகழும்

'முரசொலி' அளிக்கும்

பொங்கல் மலர்

அறிஞர் அண்ணாவின் எழுத்தோவியத்துடன் துவங்கி எழுத்து மன்னர்கள் அனைவரின் கருத்துக் குலுங்கும் தமிழ்ப் பொழிலாக விளங்கும்!

மலரில்...

நாவலர் நெடுஞ்செழியன் "நாட்டுக்கு ஒரு சேதி" சொல்லுகிறார்.

★ அரசியல் நாடகம்

★ வரலாற்றுக் கட்டுரை

★ வாழ்க்கைச் சிறு கதை

★ கவிதை நடைச் சொல்லோவியம்

இத்தனையும் கருணாநிதி எழுதுகிறார்

★

மலர் முழுதும் வண்ணப் படங்கள்!
அழகிய முகப்பு! சென்ற ஆண்டினைப் போலவே
செங்கரும்பின் சுவை—செந்தமிழ்த் தேனருவி!

★

இப்போதே உங்களூர் விற்பனையாளர்களிடம்
பதிவு செய்து கொள்ளுங்கள்!

★

எந்த மலர் கண்டும் நீங்கள் ஏமாந்ததில்லை!
ஏனிந்த விலை யென்று வியப்புற்றதுமில்லை!
இன்னும் கால்—அரை அதிகமாக்கலாம் என்றே
எழுதிப் பூரித்தீர்கள்!

அந்தச் சொந்த மலரின் விலை இரண்டே ரூபாய்தான்!

இன்றே பதிவு செய்திடுக நும் பெயரை!
எண்ணங்களை எழுதிடுக, வழக்கம்போல்!

★

விற்பனையாளர்கள் தேவையான மலர்களுக்கு உடனடியாக எழுதுவதே நல்லது!

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4–128, மவுண்ரோடு சென்னை-6, தமிழ்நாடு